# உலகநீதி

## உரையும் கதைக்குறிப்பும்

இவை

வாழ்குடை. வேங்கடராம சாஸ்திரிகள்

எழுதியன

ஆர். கணபதி அண்டு கம்பெனி

பிரம்பூர், சென்னை.

1918

காபி ரைட்]

[விலை அணா

# முகவுரை

உலகநீதி என்பது உலகத்துக்குச் சொல்லும் நீதி எனப் பொருள்படும். இஃது அன்மொழித்தொகையாய் உலகநீதியை யுணர்த்தும் இந்நூலைக் குறித்துநின்றது.

இதனை உலகநாதன் என்னும் ஒரு புலவர் பெருமான் இயற்றினார். இவர் பெயரைக் கொண்டு ஆராயுங்கால், தமிழ்நாடெங்கும் பிரக்கியாதியுடைய உலகம்மன் கோவிலைக் கொண்டுள்ள தென்பாண்டி நாட்டைச் சேர்ந்த ஓட்டப்பிடாரம் என்ற கிராமத்தின் பக்கத்தி லிருந்தவரென்று நினைக்க இடந்தருகின்றது.

இவர் பெயராலும், இந்நூலின் ஏட்டுப்பிரதி முடிவிற் காணப்படும் "ஆதரித்துப் பலவகையாற பொருளுந் தேடி, யருந்தமிழா லறுமுகனைப் பாட வேண்டி, யோதுவித்த வாசகத்தா லுலக நாதன், உண்மையாய்ப் பாடிவைத்த வுலக நீதி, காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும், கருத்துடனே நாடோறுங் களிப்பினோடு, போத முற்று மிகவாழ்ந்து புகழுந்தேடிப், பூலோக முள்ளளவும் வாழ்வர் தாமே." என்னுஞ் செய்யுளாலும், ஏட்டுப்பிரதியின் ஒவ்வொரு செய்யுளின் முடிவிலுங் காணப்படும் 'மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே' என்ற சொற்களாலும் இவர் சைவ சமயத்தவரென்றும், முருகக்கடவுளின் உண்மைப் பக்தரென்றும் கொள்ளுதல் மிகையாகாது.

இவர் "நல்லது செய்ய லாற்றீ ராயினும், அல்லது செய்ய லோம்புமி னதுதான், எல்லாரு முவப்ப தன்றியும், நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே." என்ற புறப்பாட்டின் வண்ணம், உலகத்தார் நல்ல காரியங்களைச் செய்யாவிடினும் தீயகாரியங்களை விலக்கவாவது வேண்டுமென்ற கோட்பாடுடையவரா யிருந்தாரென்பதை இந்நூற் செய்யுள் ஒவ்வொரு அடியின் முடிவிலுமுள்ள 'வேண்டாம்' என்னுஞ்சொல் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆதலால், இந்நூலைக் கற்கும் மாணவர்கள் நூலாசிரியர் கோட்பாட்டின்படி விலக்கப்பட வேண்டுமென்று சொல்லியவற்றை அறவே விலக்குவாராயின் அவர்கள் எல்லா நன்மைகளையுஞ் செய்தவராவர்

பிரதம பாடசாலை (ப்ரைமெரி ஸ்கூல்) மாணவர்களின் உபயோகத்திற்காக இந்நூலைப்போலவே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, நல்வழி என்ற சிறுநூல்களுக்கு உரையும் கதைக்குறிப்பும் எழுதுவித்து வெளிப்படுத்தி யிருக்கிறோம். இனி மூதுரையும் கதைக்குறிப்புடன் விரைவில் வெளிவரும். பிள்ளைகளுக்கு நீதி மத சம்பந்தங்களான சரித்திரங்களைக் கற்பிப்பதற்கு இவை போன்ற சிறுநூல்கள் இன்றியமையாதன.

பிரம்பூர்
சென்னை. | ஆர். கணபதி அண்டு கம்பெனி.

# உலக நீதி

## உரையும் கதைக்குறிப்பும்.

### காப்பு.

உலக நீதி புராணத்தை உரைக்கவே
கலைக ளாய்வரும் கரிமுகன் காப்பு.

1. கதை:—மதுரைப் பட்டணத்தில் கீரன் என்று ஒருவன் இருந்தான். அவன் தாழ்ந்த குலத்தில் பிறந்தவன். அவன் பந்துக்கள் சங்குகளை அறுத்து வேலைசெய்வது வழக்கம். சங்கு சமுத்திரத்தில் உற்பத்தியாகும். அஃது ஒரு வகைப் பூச்சியின் கூடு. அக்கூட்டின்மேல் நீளமான முட்கள் முளைத்திருக்கும். அவற்றை வாளினால் அறுத்து மெருகு கொடுப்பார்கள். வேலைசெய்யும் இடங்களில் உள்ளேயிருக்கும் பூச்சிகளை யடுப்பதனால் ஒருவகைக் கெட்ட நாற்றம் வீசிக்கொண்டிருக்கும். கீரன் அவ்வேலை செய்வதற்கு மனம் வராமல் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படிக்கத் தொடங்கினான். அவனுக்குப் படிப்பில் பெரிய ஆசை உண்டு. அவன் அப்படியே இரவும் பகலும் கஷ்டப்பட்டுப் படித்துச் சில வருஷங்களுக்குள் பெரிய பண்டிதன் ஆனான். அப்போது மதுரைப் பட்டணத்தில் இருந்த பாண்டிய ராஜாவுக்கு ஒரு பிரதான பண்டிதன் வேண்டியிருந்தான்.

தமிழ் நாட்டுப் பண்டிதர்கள் அந்த வேலையைத் தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று போட்டி செய்யத் தொடங்கினார்கள். அரசன் அவர்களை எல்லாரையும் வரச்செய்து பரிக்ஷிக்கத் தொடங்கினான். அவர்களோடு கீரனும் அந்தப் பரிக்ஷைக்குப் போயிருந்தான். அவன் அறிவிலும் குலத்திலும் தாழ்ந்தவன் என்று அப்பண்டிதர்கள் அபகாஸியம் செய்தார்கள். ஆனாலும், காரியம் மாத்திரம் அவர்கள் எண்ணப்படி நிறைவேறவில்லை. பரிக்ஷையில் அவன் தான் முதலில் தேறினான். பாண்டியராஜன் சந்தோஷித்து, எல்லாப் பண்டிதர்களுக்கும் அவனையே தலைமையாக நியமித்து நற்கீரன் என்ற பெயரையும் கொடுத்தான். நக்கீரன் படியாமலிருந்தால், அவனுக்கு அந்தக் கௌரவமான வேலை கிடைத்திருக்க மாட்டாதல்லவா? ஆதலால், ஒருவன் படியாமல் இருக்கலாகாது.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.

(இ-ள்.) ஓதாமல்—படியாமல், ஒருநாளும்—ஒருதினமும், இருக்கவேண்டாம்—(நீ) இருக்காதே.

2. கதை:—முன்பு சேதிப்பட்டணத்தில் சிசுபாலன் என்று ஒரு துஷ்ட அரசன் இருந்தான். பெரியவர்களையும் நல்லவர்களையும் தூஷிப்பதில் அவனுக்கு அதிகச் சந்தோஷம். அவன் எவ்விடத்துக்குப் போனாலும் அங்குள்ளவர்களை நிந்தித்து ஒரு கலகத்தை உண்டு பண்ணுவான். ஆனால், எல்லாரும் அவனை அதிகமாக வெறுத்து வந்தார்கள். அவன் காலத்தில் இந்திரப்பிரஸ்தம் என்ற பட்டணத்தில் ஒரு யாகம் நடந்தது. தரு

யுத்திர மகாராஜர் அதனைச் செய்யத் தொடங்கினார். எல்லா அரசர்களும் எல்லாப் பெரியவர்களும் அந்த யாகத்துக்கு வந்திருந்தார்கள். சிசுபாலன் அந்த யாகத்துக்குவந்து யாரைத் தூஷிக்கலாம் என்று ஆலோசனை பண்ணினான். அவன் 'அந்தனை பெரும் மரியாதை செய்து வணங்கும்படியான ஒரு பெரியவரைத் தூஷித்துத் தன் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டும்' என்று எண்ணினான். அந்தச் சபைக்குக் கிருஷ்ணர் என்பவர் தலைவராக விளங்கினார். எல்லாரும் அவருக்கு மரியாதை செய்து வணங்கத் தொடங்கினார்கள். சிசுபாலன் அதுதான் சமயம் என்று அவரைத் 'திருடன், துஷ்டன், அயோக்கியன்' என்று வாய்க்குவந்தபடி தூஷித்து, ஒருவரும் அவருக்கு மரியாதை பண்ணக் கூடாதென்று கூவினான். கிருஷ்ணர் கோபங் கொண்டு எல்லாருக்கும் எதிரில் அவனைக் கொன்று விட்டார். ஆதலால், அயலார்மேல் கெட்ட வார்த்தைகளைச் சொல்லக் கூடாது.

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.

(இ-ள்) ஒருவரையும — ஒருவர் மேலும், பொல்லாங்கு—கெட்டவார்த்தைகளை, சொல்லவேண்டாம—(நீ) சொல்லாதே.

3. கதை :— ஆதிகாலத்தில் கத்துரு என்பவள் பாம்புகளைப் பெற்று அவைகளை அன்புடன் வளர்த்துக்கொண்டு வந்தாள். எல்லாப் பாம்புகளும் நன்றாக வளர்ந்து விளையாடித் தாயாருக்குச் சந்தோஷத்தை உண்டாக்கின. ஒரு சமயத்தில் அந்தத் தாயார் பிள்ளைகளைப்பார்த்துக் "குழந்

தைகளே! நான் உங்களுக்கு ஒரு கட்டளை இடுகி றேன்; நல்ல பிள்ளைகள் தாயின் கட்டளையைத் தள்ளமாட்டார்கள்; இப்போது நீங்கள்போய் இந் திரனுடைய வெள்ளைக் குதிரையின் வாலைக் கறுப் பாக்குங்கள்! இன்று மாலையில் நான் அந்தக் குதி ரையை வந்து பார்ப்பேன்; அப்போது அதன் வால் கறுப்பாக இருக்கவேண்டும்; இல்லாவிட் டால், எனக்குக் கஷ்டம் உண்டாகும்; நீங்கள் உடனேபோய் அந்தக் காரியத்தைச் செய்து முடி யுங்கள்" என்று சொன்னாள். பாம்புகள் "அம்மா! தங்கள் கட்டளை கஷ்டமானது; எங்களால் செய்ய முடியாது; அது மிகவும் பொல்லாத குதிரை; அங்குப் போனால் நாங்கள் நிச்சயமாக இறந்து போவோம்; தாங்கள் இன்னும் யாரையாவது அனுப்பி நிறைவேற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லின. கத்துரு கோபத்தோடு "துஷ்டச் சிறுவர்களே! தாயார் கட்டளையைத் தள்ளி விட் டதனால், நீங்கள் கருடனுக்கு ஆகாரமாகவேண் டியது; அவன் நாள்தோறும் உங்களைக் கொன்று தின்று வரட்டும்" என்று சாபம் கொடுத்தாள். அன்றுமுதல் பாம்புகள் கருடனுக்கு உணவாக இருந்து வருந்தி வருகின்றன. தாயின் வார்த் தையைக் கேட்டு நடந்திருந்தால், அவைகளுக்கு அந்தக் கஷ்டம் நேர்ந்திருக்காதல்லவா?

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

(இ-ள்.) மாதாவை—தாயாரின் (கட்டளையை), ஒரு நாளும்—ஒருதினமும், மறக்கவேண்டாம்—(நீ செய்வதற்கு) மறந்து போகாதே.

4. கதை:—ஒருகாட்டில் ஒரு மானும் காகமும் ஒன்றாக வசித்து வந்தன. புலிமுதலான துஷ்ட மிருகங்கள் மானைப் பிடிக்க வரும்போதெல்லாம் காகம் எச்சரிக்கை செய்து மானைக் காப்பாற்றும். இராக் காலங்களில் மரத்தின் மேல் காகமும் அதன்கீழ் மானும் நித்திரை செய்வது வழக்கம். ஒருநாள் வஞ்சனையில் தேர்ந்த நரியொன்று மானைக் கொன்று தின்னவேண்டும் என்று அதன் எதிரில் வந்து நின்றது. மான் 'நீ யார்?' என்று கேட்டதற்கு, நரி "நண்பனே! நான் ஆருமற்ற பாவி; இந்தக் காட்டில் பரதேசியாக அலைந்து திரிகிறேன்; பேச்சுத் துணைக்குக்கூட ஒருவரும் அகப்படவில்லை" என்று சொல்லிற்று. கபடம் தெரியாத அந்த மான் மனமிரங்கி 'நீயும் நானும் இன்று முதல் கூட்டாளியாக இருப்போம்' என்று சொல்லிக் காகத்துக்கு அதன் வரவைத் தெரிவித்தது. காகம் "நண்பனே! நரியை நட்புக்கொள்ள வேண்டாம்; அதன் கூட்டுறவு உனக்கு நாசத்தை உண்டுபண்ணும்; அதன் வஞ்சனையை உன்னால் அறிந்துகொள்ள முடியாது" என்று சொல்லிற்று. மான் அதன் வார்த்தையைக் கேட்காமல் நரியைச் சேர்த்துக்கொண்டது. இரண்டு நாளைக்குப் பின்பு நரி 'மித்திரா! நல்ல உணவு இருக்கும் இடத்தை நான் கண்டு வந்திருக்கிறேன்; அங்கு இளம் புல் நன்றாக வளர்ந்திருக்கின்றது' என்று சொல்லி, மானை அழைத்துக்கொண்டு போய் ஒரு தினைக் கொல்லையைக் காட்டிற்று. அன்று முதல் மான் தினந்தோறும் சென்று அந்தப் பயிரை மேய்ந்து வந்தது. கொல்லைக்காரன் பயிர் அழிந்து

போவதைக்கண்டு அங்கே ஒரு வலையைக் கட்டி வைத்தான். மான் வழக்கம்போலப் பயிரை மேயச் சென்று வலையில் அகப்பட்டுக்கொண்டது. பின்பு அது நரியைப்பார்த்து "மித்திரா! ஏன் சும்மா விருக்கிறாய்? சீக்கிரம் வலையைக் கடித்து என்னை விடுவி; கொல்லைக்காரன் வருவதற்குள் தப்பித்துப் போகலாம்" என்றது. நரி "நண்பனே! உனக்கு உதவி செய்யத் தடையில்லை. ஆனால், இன்று எனக்கு நோன்பு நாள். தோல்வலையைத் தீண்டமாட்டேன். நாளைமுதல், எவ்விதமான உபகாரத்தையும் உனக்குச் செய்து முடிப்பேன்" என்று சொல்லி மறைந்துபோயிற்று. மான் 'நரியின் வஞ்சனையை நம்பி மோசம் போனேனே' என்று வருந்தித் துக்கப்பட்டது. ஆதலால், வஞ்சனை செய்கின்றவர்களுடன் பழகலாகாது.

வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்) வஞ்சனைகள்—கபடங்கள். செய்வாரோடு—செய்கின்றவர்களோடு, இணங்கவேண்டாம்—(நீ) சிநேகம் செய்யாதே.

5. **கதை:**—நாகைப்பட்டணத்தில் கோவிந்தன் என்ற வண்ணனிடத்தில் ஒரு கழுதை இருந்தது. அவன் அதனை அன்போடு வளர்த்து வந்தான். குறைவில்லாமல் தீனி கிடைத்து வந்ததனால் கழுதைக்குக் கொழுப்பு அதிகமாகி, அழுக்கு மூட்டைகளைச் சுமப்பது அகௌரவம் என்றும், தன் வயிற்றுக்குத் தானே இரைதேடிக்கொள்ள வேண்டும் என்றும், இஷ்டப்படி வெளியில் உலாவித் திரியவேண்டும் என்றும் நிச்சயித்தது.

பின்பு அந்தக் கழுதை ஒருநாள் சமயம்பார்த்துக் காட்டில் ஒளிந்துகொண்டு விட்டது. கோவிந்தன் கஷ்டப்பட்டுத் தேடியும் அது அகப்படவில்லை. இரண்டு மூன்று நாள் வரையில் கழுதை அந்தக் காட்டில் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தது. பிற்பாடு, அது ஒருநாள் இராத்திரி நிலாவெளிச்சத்தில் அதிகச் சந்தோஷமடைந்து தன் கனத்த குரலை எழுப்பிப் பாடத்தொடங்கிற்று. அப்போது சமீபத்தில் இரையை நாடிவந்த ஒரு பெரும் புலி அதன்மேற் பாய்ந்து கொன்று தின்றுவிட்டது. ஆதலால், கழுதையைப்போல நாமும் போகத் தகாத புதிய இடங்களுக்குப் போகக்கூடாது.

போகாத இடந்தனிலே போக வேண்டாம்.

(இ-ள்) போகாத—போகத்தகாத, இடம்தனிலே—(புதிய) இடத்துக்கு, போகவேண்டாம்—(நீ) போகாதே.

6. கதை:—முன்னொரு காலத்தில் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் ஒரு பெரிய சண்டை உண்டாயிற்று. அந்தச் சண்டையில் வௌவால் ஒரு கக்ஷியிலும் சேராமல் இரண்டுக்கும் பொதுவாக இருந்தது. அது முதலில் மிருகங்களைக் கண்டு "நண்பர்களே! நான் உங்கள் இனம். என்னைப் பாருங்கள்! எனக்குக் காதுகளும் பற்களும் இருக்கின்றன. குஞ்சுகளைப் பெறுகிறேன். அவைகளுக்குப் பால் கொடுக்கிறேன். உடம்பில் மயிர் இருக்கின்றது. எனக்குப் பறவைகளிடத்தில் பகை உண்டு அறிவு கிடையாதென்று அவைகள் நம்மை அலக்ஷியம் பண்ணுகின்றன. என் வார்த்தையைக் கேளுங்கள்! குரங்கு பூனை முதலான சகோதரர்கள் மரங்களில் ஏறிப் பறவைக் கூண்டுகளை

அழித்து அவற்றின் குஞ்சுகளை நாசம்செய்யட்டும். செந்நாய், புலி முதலானவைகள் அவைகளை நிலத்தில் இறங்கவிடாமல் துரத்தி யடிக்கட்டும். நமக்கு உடனே ஜயம் உண்டாகும்" என்று சொல்லிற்று. மிருகங்கள் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டன. பிற்பாடு, அது பறவைக ளிடத்துக்குச் சென்று "நண்பர்களே! நான் உங்கள் இனம். நான் மிருகங்களை ஒத்திருக்கவில்லை. உங்களைப் போலவே ஆகாயத்தில் பறந்துபோகிறேன். மரங்களில் வசிக்கிறேன். நான் மிருகங்களை விரும்புவதில்லை. நம்மை 'அற்பப் பிராணிகள் என்றும், வாயும் மூக்கும் ஒன்றாக இருக்கின்றனவென்றும்' அவைகள் பரிகாசம் பண்ணுகின்றன. அஃது எனக்குப் பொறுக்க முடியவில்லை. நம் சகோதரர்கள் மிருகங்களைக் கண்டவிடத்தில் குத்திக்கொல்ல வேண்டும். அவற்றை நிமிஷ நேரமாவது இளைப்பாற விடலாகாது. இப்படிச் செய்தால் மிருகங்கள் தோல்வி யடையும்" என்று கூறிற்று. பறவைகள் அதன் வார்த்தையை அங்கீகரித்தன. பின்பு சில நாட்களில் சண்டை முடிந்து மிருகங்களும் பறவைகளும் சமாதானமாயின. விருந்துகளும் வேடிக்கைகளும் நடக்கத் தொடங்கின. அவைகள் தாங்கள் இல்லாத விடத்தில் அதிகமாகத் தூஷித்துத் தங்களுக்குப் பகையை உண்டு பண்ணின வௌவாலைக் கூப்பிடவே யில்லை. அன்று முதல் தங்கள் இனத்தோடு வௌவாலைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்றும் அவைகள் தீர்மானித்துக் கொண்டன. வௌவால் அவமான மடைந்து இருட்டில் ஒளித்துக்கொண்டது.

ஆதலால், ஒருவர் இல்லாதவிடத்தில் அவரைத் தூஷிக்கலாகாது.

போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.

(இ-ள்.) போகவிட்டு—(ஒருவர்) போன பிற்பாடு, புறம் சொல்லி—(அவர்மேல்) குற்றம்சொல்லி, திரியவேண்டாம்—(நீ) திரியாதே.

---

7. கதை:—திருப்பத்தூரில் முருகன் என்ற ஒரு பையன் மாடு மேய்த்து வந்தான். அவன் ஒரு நாள் மாலைப் போதில் மலையடிவாரத்தில் மாடுகளை மடக்கி விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஒரு வேடிக்கை காட்டவேண்டும் என்று "புலி வருகிறது! புலி வருகிறது!!" என்று ஒரு பொய்க் கூச்சல் போட்டான். அவர்கள் உண்மை என்று நினைத்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். அங்கே புலியைக் காணவில்லை. அவர்களைக்கண்டு பையன் கைக்கொட்டிச் சிரிக்கத் தொடங்கினான். அவர்கள் அச்சிறுவன் தங்களைப் பொய் சொல்லி ஏமாற்றினான் என்று திட்டிக்கொண்டு திரும்பிப் போய்விட்டார்கள். மற்றொருநாள் உண்மையாகவே புலி வந்துவிட்டது. முருகன், "ஐயோ! புலி!! புலி!!!" என்று பலதரம் கூவினான். அவன் முன்போலவே வேடிக்கை செய்கிறான் என்று நினைத்துக்கொண்டு ஒருவரும் வரவில்லை. புலி வந்து பையனைக் கடித்துத் தின்றுவிட்டது. ஆதலால், எப்போதும் பொய் சொல்லக்கூடாது.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.

(இ-ள்.) நெஞ்சு ஆர—மனம் அறிய, பொய் தன்னை—பொய்யை, சொல்ல வேண்டாம்—(நீ) சொல்லாதே.

8. கதை :—பம்பாய்ப் பட்டணத்தில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் எல்லாவற்றை யும் உண்மை என்று நம்புகின்றவன். ஒருநாள் ஒரு ஜோஸ்யன் 'தூங்கி யெழுந்ததும் இரண்டு காகங் களைப் பார்த்தால், பணம் விருத்தியாகும்' என்று சொன்னான். அவனுக்குத் தினந்தோறும் காகங் களைக் கண்டு அதிகமாய்ப் பணம் சேர்க்க வேண்டு மென்று ஆசை உண்டாயிற்று. அவன் தன் னுடைய வேலைக்காரனை அழைத்து "நீ தினமும் விடியற் காலையில் இரண்டு காகங்களைக் கண்டுவந்து எனக்குச் சொல்! நான் எழுந்ததும் அவற்றின் முகத்தில் விழிக்க வேண்டும்" என்று கட்டளையிட் டான். வேலைக்காரன் மறுநாள் காலையில் ஓரிடத் தில் இரண்டு காகங்களைக் கண்டுவந்து யஜமானனை எழுப்பினான். யஜமானன் போவதற்குள் அவற் றில் ஒன்று பறந்துபோய், ஒன்று மாத்திரம் மரக் கிளையில் உட்கார்ந் திருந்தது. அவன் கோபம் கொண்டு "தடிக்கழுதை! நான் இரட்டைக் காகங் களைக் கண்டுவந்து சொல் என்று கட்டளை யிட் டால், ஒற்றைக் காகத்தைக் கண்டு என்னை அழைத்து வந்திருக்கிறாயா?" என்று கைப்பிரம்பி னால் பத்துப் பன்னிரண்டு அடி யடித்தான். வேலைக்காரன் "யஜமானே! நான் இரண்டு காகங் களைக் கண்டதற்கு நல்ல பலனை அடைந்துவிட் டேன். தாங்கள் கண்டிருந்தால், இப்படிப்பட்ட பலன் தங்களுக்கும் கிடைத்திருக்க வேண்டும் அல்லவா! தங்கள் நல்ல காலத்துக்காகவே அவற்றில் ஒன்று பறந்துபோயிற்றென்று நினைத் துக் கொள்ளுங்கள்!" என்று சொன்னான். அவன்

நிச்சயம் இல்லாத காரியத்தை நம்பி வேலைக்கா ரனை அடித்த மூடத்தனத்துக்கு வெட்கப்பட்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்.

(இ-ள்.) நிலைஇல்லா—நிச்சயம் இல்லாத, காரியத்தை—சங்கதிகளை, நிறுத்தவேண்டாம்—(நீ) நிலைப்படுத்தப் பார்க்காதே.

9. கதை:—மதுரைப் பட்டணத்தில் முத்து வீரன் என்று ஒரு பாம்பாட்டி இருந்தான். அவன் தினந்தோறும் காட்டுக்குச் சென்று புதிய பாம்புகளைப் பிடித்துவந்து ஆட்டி ஜீவனம் செய்வது வழக்கம். அவன் ஏழெட்டுப் பாம்புகளுக்குக் குறையாமல் எப்போதும் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பான். அவன் ஒருநாள் வழக்கப் படி புதிய பாம்பு ஒன்றைப் பிடித்து வந்தான். வேலை அவசரத்தினுல் அதனுடைய விஷப்பல்லைப் பிடுங்காமல் ஒரு பானையில் விட்டுக் கவிழ்த்து வெளியில் போய்விட்டான். பின்பு மாலையில் நன்ருய்க் குடித்துத் தள்ளாடிக் கொண்டிருந்தான். அப்போது சில விருந்தினர் அவன் வீட்டுக்கு வந்தார்கள். முத்துவீரன் அவர்களைச் சந்தோஷப் படுத்தும் பொருட்டுக் குடியின் மயக்கத்தினுல் புதிய பாம்பை அடைத்திருந்த பானையைத் தூக்கிக்கொண்டு வந்தான். மூடியைத்திறந்த மாத்திரத்தில் அந்தப் பாம்பு வெளியில் வந்து அவனையும் விருந்தாளிகளையும் கடித்துச் சென்று விட்டது. முத்துவீரனும் அவன் விருந்தினர்களும் அநியாயமாக அப்போதே மரணமடைந்தார்கள்.

ஆதலால், விஷப் பாம்புகளோடு ஒருநாளும் பழகலாகாது.

நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.

(இ-ள்.) நஞ்சுடனே—விஷமுள்ள (பாம்புகளோடு), ஒரு நாளும்—ஒரு தினமும், பழகவேண்டாம்—( நீ ) பழகாதே.

10. கதை :—முன்னொரு காலத்தில் சில திருடர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு பெருங்காட்டில் இருந்து வந்தார்கள். அவர்கள் வழிப்போக்கர்களை மடக்கிக் கொள்ளையிட்டு வருவார்கள். பொருள் கொடுக்காதவர்களை அடித்தும் குத்தியும் கொன்றும் தொந்தரவு செய்வது வழக்கம். ஒரு நாள் ஒரு கவுரவமுள்ள அந்தணன் அவர்களைக் கண்டான். திருடர்கள் அவனை அதிகமாக உபசரித்தார்கள். அன்று முதல் அந்தணனுக்கு அவர்களிடத்தில் நட்பு உண்டாயிற்று. அவன் அடிக்கடி அவர்களிடத்துக்குச்செல்வதும், இரண்டொரு நாள் அங்கேயே யிருந்து களிப்பதுமாக இருந்தான். அதுமுதல் கள்ளர்கள் வழிப்போக்கரிடத்தில் கொள்ளை யிடுகின்ற ஆபரணங்களை யெல்லாம் அவனிடத்தில் கொடுத்து அவன் மூலமாகவே விற்றுவரத் தொடங்கினார்கள். அந்தணன் செல்வாக்கு உள்ளவனாதலால், ஒருவரும் சந்தேகம் கொள்ளவில்லை. ஒருசமயத்தில் அந்தப் பட்டணத்தில் உள்ள ஒரு பிரபு அயலூருக்குச் செல்கையில் கள்ளர்கள் அவருடைய பொருள்களையும் கொள்ளையிட்டார்கள். அந்தணன் விற்ற பொருள்களில் பிரபுவின் ஆபரணங்களிலும் சில கலந்திருந்தன.

அது பின்பு பிரபுவுக்குத் தெரிந்தது. அவர் சந்தேகப்பட்டு அவன் வீட்டைப் பரிசோதிக்கப் பண்ணினார். அதில் திருடர்கள் விற்றுவரக் கொடுத்த எல்லாப் பொருள்களும் எளிதில் அகப்பட்டுவிட்டன. அந்தணன் நியாய சபையில் அப்பொருள்களின் வரவுக்குக் காரணம் சொல்லாத படியினால் அதிகாரிகள் அவனைச் சிக்ஷைசெய்துவிட்டார்கள். அவன் முதலில் நல்லவர்களோடு சகவாசம் செய்திருந்தால், சிக்ஷையை அடைந்திருக்க வேண்டாமல்லவா!

நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்.) நல்லிணக்கம்—நல்ல சகவாசம், இல்லாரோடு — இல்லாதவர்களோடு, இணங்கவேண்டாம் — (நீ) சிநேகம செய்யாதே.

11. கதை :—ஒரு குரு தன் மாணாக்கனைப் புஸ்தகம் வாங்கிவரும்படி அயலூருக்கு அனுப்பினார். அவன் தாயாரிடத்தில் வந்து குருவின் கட்டளையைத் தெரிவித்தான். தாயார் "குழந்தாய்! குருவின் கட்டளை அவசியமானது; ஆனாலும், நீ துணையில்லாமல் அயலூருக்குப் போகக்கூடாது. மனிதர் துணை இல்லாவிட்டாலும் நான் கொடுக்கும் துணையையாவது இகழாமல் எடுத்துக் கொண்டு போ! உனக்கு நன்மை உண்டாகும்" என்று சொல்லிக் கலயத்தில் ஒரு நண்டைப் போட்டுக் கொடுத்தனுப்பினாள். மாணாக்கன் தாயின் வார்த்தையை அலக்ஷியம் பண்ணாமல் கலயத்தைக் கையில் கொண்டுபோனான். அவன் துரிதமாகவே நடந்து புஸ்தகம் வாங்கிக்கொண்டு திரும்பிவிட்டான். ஆனாலும், அவனுக்கு நடு

வழியில் இளைப்பு அதிகமாக இருந்தது. ஆதலால், அவன் கலயத்தோடு ஓர் ஆலமரத்தடியில் படுத்துத் தூங்கத் தொடங்கினான். அப்போது புற்றிலிருந்து வந்த ஒரு பாம்பு அவனைக் கடிப்பதற்கு நாவை நீட்டி வந்தது. அது முதலில் கலயத்தில் ஏதாவது உணவு இருக்குமென்று நினைத்து அதில் தலையை நுழைத்தது. உடனே உள்ளேயிருந்த நண்டு பாம்பின் தலையைப் பிடித்துக் கொடுக்கினால் கத்தரித்து விட்டது. மாணக்கன் விழித்துக்கொண்ட பிற்பாடு, நண்டின் உதவியைக் கண்டான். அவனுக்குச் சந்தோஷம் அதிகமாயிற்று. அவன் அப்படியே கலயத்தை எடுத்துக்கொண்டு தாயாரிடத்திற்கு வந்து 'அம்மா! உன் துணை இல்லாவிட்டால் நான் அநியாயமாக இறந்துபோயிருப்பேன்' என்று நடந்த விஷயங்களைச் சொல்லி வணங்கினான். ஆதலால், துணையில்லாமல் வெளியில் செல்லக் கூடாது.

அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.

(இ-ள்.) *அஞ்சாமல்—பயப்படாமல், தனிவழியே—(துணையில்லாமல்) தனிமையாக, போகவேண்டாம் — (நீ) போகாதே.*

12. கதை :—வெகு காலத்துக்கு முன்பு அயோத்திப்பட்டணத்தில் தசரதர் என்று ஒரு பெரிய அரசர் இருந்தார். அவர் மூத்த புத்திரனை இராமன் என்பவன் தந்தை கட்டளையின் வண்ணம் காட்டில் பதினான்கு வருஷம் வாசம் செய்யப்போனான். அப்போது அவன் மனைவி சீதையும், சகோதரன் இலக்ஷ்மணனும் அவனைத்

தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் தண்டக வனத்தில் இருக்கும்போது இலங்கைப்பட்டணத்துக்கு அரசனாகிய இராவணன் என்றவன் அவர்கள் இல்லாத சமயம் பார்த்துச் சீதையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். பிற்பாடு, இராமன் சுக்கிரீவன் முதலான குரங்குக் கூட்டங்களைத் துணை சேர்த்துக்கொண்டு இராவணனோடு சண்டை செய்யப்போனான். தென் சமுத்திரக் கரையில் இராமனும் அவன் படைவீரர்களும் தங்கியிருந்தார்கள். அப்போது இராவணன் தம்பியான விபீஷணன் என்பவன் வந்து, இராமன் காலில் விழுந்து 'நான் தங்களை நம்பி வந்திருக்கிறேன்; என்னைக் காப்பாற்றவேண்டும்' என்று பிரார்த்தித்தான். சுக்கிரீவன் முதலான மந்திரிகள் "விபீஷணனை நம்பலாகாது; அவன் துஷ்டனாகிய இராவணனுக்குச் சகோதரன்; ஒருகால் நம்முடைய அந்தரங்க ஆலோசனைகளை அறிந்துபோவதற்காகவும்வந்திருக்கலாம்" என்று பலவாறு சொல்லித்தடுத்தார்கள். இராமன் அவ்வார்த்தைகளைக் கொஞ்சமாவது அங்கீகரிக்கவில்லை. அவன் 'நண்பர்களே! விபீஷணன் சரணம் அடைந்திருக்கிறான். அவனால் எவ்வளவு கெடுதி நேரிட்டாலும் பொறுத்துக்கொள்ளலாம். நான் சண்டையில் இராவணனைக் கொன்று இலங்கைப் பட்டணத்தை இவனுக்குச் சொந்தமாக்குகிறேன். இவன் அதற்கு அரசனாக இருந்துவரட்டும்' என்று சொல்லி விபீஷணனுக்கு அபயம் அளித்தான். ஆதலால், இராமனைப்போலவே நாமும் அடுத்தவர்களை ஆதரிக்கவேண்டும்.

அடுத்தவரை யொருநாளும் கெடுக்கவேண்டாம்.

(இ-ள்.) அடுத்தவரை—(நம்மை நம்பி வந்து) அடுத்தவர்களை, ஒருநாளும்—ஒருபோதும், கெடுக்கவேண்டாம்—(நீ) கெடுக்காதே.

## 13. 5 வது கதையைப் படித்துக்கொள்க.

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.

(இ-ள்.) மனம்போன—மனம் விரும்பின, போக்கு எல்லாம் — வழிகளில் எல்லாம், போகவேண்டாம்—(நீ) போகாதே.

**14.** கதை:—ஒருநாள் ஒரு கிழக்கொக்கு தண்ணீர் குறைந்துபோன ஒரு குளத்தில் விசனமாக உட்கார்ந்திருந்தது. குளத்தில் இருந்த மீன்கள் 'நீ ஏன் விசனமாக உட்கார்ந்திருக்கிறாய்?' என்று கேட்டன. கொக்கு 'நண்பர்களே! நான் உங்களுக்காகவே விசனப்படுகிறேன். செம்படவர்கள் நாளை இந்தக் குளத்துக்கு வந்து வலைவீசி உங்கள் எல்லாரையும் பிடித்துவிடப் போகிறார்களாம்' என்று சொல்லிற்று. எல்லா மீன்களும் அவற்றைக்கேட்டுப் பயந்து 'இத்தருணத்தில் நீயே எங்களைக் காப்பாற்றவேண்டும்' என்று வேண்டிக்கொண்டன. கொக்கு நான் கிழவன். எனக்குச் செம்படவர்களோடு சண்டைபண்ணி விடுவிப்பதற்குச் சாமர்த்தியம் கிடையாது. நீங்கள் இஷ்டப்பட்டு வந்தால், உங்களை வேறொரு நல்ல குளத்தில் கொண்டு சேர்க்கிறேன் என்று சொல்லிற்று. அந்த அறிவில்லாத மீன்கள் கொக்கு தங்களுக்குச் சத்துரு வென்பதையும் பாராமல்

அப்படியே கொண்டுவிடு!' என்று சொல்லின. உடனே கொக்கு நடைக்கு ஒவ்வொன்றாகக் குளத்திலிருந்த எல்லா மீன்களையும் தன் மூக்கினாற் கௌவிக்கொண்டு போய்ச் சில மீன்களைத் தின்று மற்றவற்றை ஒரு பாறையின்மீது உலர்த்திவிட்டது. மீன்கள் முதலில் கொக்கை நம்பாதிருந்தால் அப்படி மரணமடைய வேண்டாமல்லவா?

மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்.

(இ-ள்) மாற்றானை — சத்துருவை, உறவு என்று — சுற்றம் என்று, நம்ப வேண்டாம் — (நீ) நம்பாதே.

---

15. கதை:—ஒரு காட்டில் சில தேனீக்கள் இருந்தன. அவைகள் மழைகாலத்துக்கு வேண்டும் என்று பூக்கள்தோறும் சென்று தேனைக் கொண்டுவந்து ஒரு மரக்கிளையில் சேர்க்கத்தொடங்கின. துளித்தேன் கூடத் தங்கள் வயிற்றுப்பசிக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அவைகள் காட்டில் அலைந்து கஷ்டப்பட்டுத் துளித்துளியாகத் தங்கள் வாயில் தேனை எடுத்துக்கொண்டு வரும். பகலில் தேன் சேர்ப்பதும் இரவில் காவல் காப்பதும்தான் அவற்றின் தொழில். அங்ஙனம் சேர்க்கச் சேர்க்கத் தேன் கூடு தினமும் வளர்ந்து அவைகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணிற்று. சில ஈக்கள் தேன்கூண்டைச் சுற்றிவரும். சில ஈக்கள் அதன் அழகைக் கண்டு சந்தோஷப்படும். சில ஈக்கள் ஆநந்தக் கூத்தாடும். சில ஈக்கள் கூண்டில் உள்ள தேன் தங்களுக்கு மழைகாலம் மொத்தத்துக்கும் கண்டு மிஞ்சும் என்று சொல்லும். அந்தச் சந்தோஷத்திலேயே மெள்ள

மெள்ள கோடைகாலம் மாறத்தொடங்கிற்று. ஒரு நாள் அந்தக்காட்டுக்கு ஒரு வேடன் வந்தான். அவன் மரத்தில் கட்டியிருந்த அழகான தேன் கூண்டைக்கண்டான். அவனுக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. உடனே மரத்தில் ஏறித் தேனீக்களைத் தீயிட்டுக்கொளுத்தித் தேன்கூண்டை அப்படியே எடுத்து வந்துவிட்டான். அந்தோ! தேனீக்கள் இரவும் பகலும் வருந்திச் சேர்த்த தேனில் அவை களுக்குக் கொஞ்சமாவது பயன்படவில்லை. தாங் கள் சேர்த்த தேனின் பொருட்டுத் தங்கள் உயிரை யும் விட்டுவிட்டன. ஆதலால், தேனீக்களைப் போல நாமும் பணத்தைச் சேர்த்துப் புதைத்து வைக்கலாகாது.

தனம்தேடி யுண்ணுமல் புதைக்க வேண்டாம்.

(இ-ள்.) *தனம்தேடி—பொருளைச் சம்பாதித்து, உண்ணுமல்—சாப்பிடாமல், புதைக்கவேண்டாம்—(நீ நிலத்தில்) புதைத்து வைக்காதே.*

16. கதை :—ஆதிகாலத்தில் திருதராஷ்டிரன் என்ற அரசனுக்குத் துரியோதனன் முதலான நூறுபிள்ளைகள் இருந்தார்கள். அஸ்தினாபுரத்தின் சிங்காசனம் அவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் பொதுவாக இருந்தது. பாண்டவர் அவர்களுக்குச் சிறிய தந்தையின் புத்திரர்கள். ஆதலால் இரு வரும் எங்களுக்குச் சொந்தம்! எங்களுக்குச் சொந் தம்!' என்று சொல்லிவந்தார்கள். பிற்பாடு, அவ் விருவரும் சண்டை செய்யவேண்டும் என்றும், சண்டையில் வெற்றியடைந்தவர்கள்தாம் சிங்கா சனத்துக்குச் சொந்தமாக வேண்டும் என்றும் தீர் யானித்துக் கொண்டார்கள். குரு க்ஷேத்திரம் என்

னும் இடத்தில் இருவருக்கும் சண்டை ஆரம்ப மாயிற்று. எண்ணிக்கை யில்லாத வீரர்கள் இரண்டு கட்சியிலும் கலந்து சண்டைசெய்தார்கள். அந்தச் சண்டை பதினெட்டு நாள்வரையில் ஓயாமல் நடந்தது. அதில் பதினேழாவது நாள் துரியோதனன் பக்கத்தில் கர்ணன் என்பவனும், பாண்டவர்களில் அர்ச்சுனன் என்பவனும் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினார்கள். அப்போது அர்ச்சுனன் அதிகமான பாணங்களைத் தொடுத்துக் கர்ணனை இளைக்கப் பண்ணினான். உடம்பு முழுவதும் அம்புகள் பொத்துக் கொண்டதனால் கர்ணன் அப்படியே தேரில் சாய்ந்து விழுந்து விட்டான். கர்ணன் யாசகர்களும் பிச்சைக்காரர்களும் எதைக் கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுத்துவருவது வழக்கம். அவன் செய்துவந்த அந்தருமத்தினால் அந்த ஆபத்துக்காலத்தில் ஒரு வீரன் திடீரென்று தோன்றிக் கர்ணனை எடுத்து அவன் களை தெளியும் வரையில் உபசாரம் செய்துகொண்டிருந்தான். கர்ணன் அவ்வுபசாரத்தினால் களை தெளிந்தெழுந்து அவனை 'நீ யார்?' என்று கேட்டான். அவ்வீரன் 'நான் கடவுளால் அனுப்ப வந்தவன். கடவுள் உன் தருமத்துக்கு மெச்சி உனக்கு உபகாரம் செய்யும்படி என்னை அனுப்பினார். ஆதலால், நீ தருமத்தை விடாமல் செய்துகொண்டிரு! கடவுள் உனக்கு உதவிசெய்வார்' என்று சொல்லிப் போய்விட்டான். கர்ணன் தருமம் செய்திராவிட்டால் அந்த ஆபத்துச் சமயத்தில் அவன் உதவியை அடைந்திருக்க முடியாதல்லவா?

தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்.

(இ-ள்.) *தருமத்தை—தருமம் செய்வதை, ஒருநாளும்—ஒரு தினமும், மறக்கவேண்டாம்—(நீ) மறந்துபோகாதே.*

17. *கதை:*—ஒருசமயத்தில் எல்லா முனிவர்களும் எல்லாத் தேவர்களும் ஓரிடத்தில் சபை கூடினார்கள். அங்கே உலகத்தில் உண்மை பேசுகின்றவன் யார் என்று ஒரு கேள்வி உண்டாயிற்று. அதற்கு வசிஷ்டர் என்ற முனிவர் 'அயோத்தியில் அரிச்சந்திரன் என்று ஓர் அரசன் இருக்கிறான். நான் அறிந்தவரையில் அவன்தான் உண்மைக்குப் பொக்கிஷமானவன்' என்று சொன்னார். நடக்கு முன்பு வசிஷ்ட முனிவர் எழுந்து சொல்லிவிட்டாரல்லவா என்னும் கோபத்தினால் விசுவாமித்திரர் என்ற வேறொரு முனிவர் 'அரிச்சந்திரன் பொய்யன்; அவன் அரை நிமிஷத்துக்குள் ஐம்பது பொய் சொல்லுவான்' என்று படபடப்பாய்ப் பேசினார். உடனே 'அதனை மெய்ப்பிக்கவேண்டும்' என்று சபையில் ஒருகூச்சல் உண்டாயிற்று. விசுவாமித்திரர் 'அப்படியே செய்கிறேன்' என்று சொன்னார். சபையும் கலைந்தது. எல்லாரும் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அப்புறம் விசுவாமித்திர முனிவருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவர் அரிச்சந்திரனை எவ்விதத்தில் பொய்யனாக்கலாம் என்று தமக்குத் தெரிந்த அவ்வளவு உபாயங்களையும் செய்து அவ்வரசனுக்குப் பலவிதமான துன்பங்களை உண்டுபண்ணினார். எவ்வளவு செய்துங்கூட அவர் நினைத்தகாரியம் நிறைவேறவில்லை. கடைசியில் அவர் எல்லாத் தவங்களையும் இழந்து எல்

லாருக்கும் முன்னிலையில் அவமானத்தையும் அடைந்துபோனூர். அவர் முதலில் கோபித்துக் கொண்டு அரிச்சந்திரன் பொய்யன் என்று சொல் லாமலிருந்தால் அவமானத்தையும் கஷ்டத்தை யும் அடைந்திருக்க வேண்டாமல்லவா ?

சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்.

(இ-ள்.) சினம்தேடி — கோபத்தை உண்டாக்கிக் கொண்டு, அல்லலை—(அதனுல் வரும்) துன்பத்தை, தேட வேண்டாம்—(நீ) தேடிக்கொள்ளாதே.

18. கதை:—வெதகாலத்துக்கு முன்பு தக்ஷன் என்று ஓர் உயர்ந்த அரசன் இருந்தான். அவ னுக்கு இருபத்தெட்டு பெண்கள் பிறந்தார்கள். மூத்த புத்திரிக்குத் தாக்ஷாயணி என்று பெயர். அவன் அப்பெண்ணைப் பரமசிவனுக்கும் மற்றப் பெண்களைச் சந்திரனுக்கும்கொடுத்துக் கலியாணம் செய்வித்தான். பிற்பாடு, சில காரணங்களினுல் அவனுக்குப் பரமசிவன்மீது மனஸ்தாபம் உண் டாயிற்று. நாள் செல்லச் செல்ல அந்த மனஸ் தாபம் அதிகமாக வளர்ந்து பெருகிவிட்டது. அந்தக் காரணத்தினுல் அவன் தன் புத்திரியை ஒரு நாளாவது வீட்டுக்கு அழைத்து வருவதில்லை. அவர்கள் இருவரையும் எப்போதும் தூஷித்துக் கொண்டே யிருப்பான். ஒருசமயத்தில் அவன் உயர்ந்த யாகம் ஒன்று செய்யத் தொடங்கினுன். அதற்கு எல்லாத் தேவர்களும் வந்திருந்தார்கள். பரமசிவன் மாத்திரம் வரவில்லை. அப்போது தாக்ஷாயணி தகப்பன் வீட்டுக்குப் போக விரும்பி னுள். பரமசிவன் ‘நாயகி, உன் தந்தை நம்

மைக் கூப்பிடவில்லை; வெகுகாலமாக விரோதம் பாராட்டி வருகிறார்; நம்மை மதிக்காத பந்துக்கள் வீட்டுக்கு நாம் போகக்கூடாது' என்று பலவிதமாகச் சொல்லித் தடுத்தார். தாக்ஷாயணி அவற்றைக் கேட்காமல் தந்தையின் யாகத்துக்குட் போனாள். தக்ஷன் அவளை அப்பொழுதாவது 'வா' என்று சொல்லி உபசரிக்கவில்லை. சபையில் அவளுக்கு அவமானமுண்டாகும்படி பரமசிவனைப் பலவாறு தூஷித்துப் பேசினான். அவள் அந்த அவமானத்தினால் புருஷன் வீட்டுக்குத் திரும்ப வெட்கப்பட்டு அவன் செய்யும் யாகத்தீயிலேயே விழுந்து இறந்துபோனாள். ஆதலால், நம் மேல் பெருங் கோபங்கொண்டு மதிக்காமலிருக்கின்ற பந்துக்கள் வீட்டுக்குச் செல்லக்கூடாது.

சினத்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்

(இ-ள்) சினத்து இருந்தார்—(நம்மேல) கோபித்துக் கொண்டிருக்கும் (பந்துக்களுடைய), வாசலவழி—வீட்டை, சேர வேண்டாம்—(நீ) அடையாதே

19. கதை :—முற்காலத்தில் பாண்டவர் ஐவரும் தங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் சூதாட்டத்தில் இழந்து வனத்தில் வாசம்பண்ணி வந்தார்கள். அப்போது துரியோதனன் அவர்களுக்குத் தீங்கு செய்யவேண்டும் என்று நினைத்துச் சில சகோதரர்களோடு காட்டுக்கு வந்திருந்தான். அங்குச் சித்திராங்கன் என்ற அரசனுக்கும் அவனுக்கும் சண்டை நடந்தது. அதில் அவன் தோல்வி யடைந்ததனால் அவ்வரசன் துரியோதனனையும் அவன் சகோதரர்களையும் சிறைப்படுத்திக்கொண்டு தன் பட்டணம் செல்லத்தொடங்கி

ஞன். வேலைக்காரர்கள் அரசனும் அரச சகோதரர் ஞம் சிறைப்பட்டதற்குத் துக்கப்பட்டு அடுத்த னத்தில் கிடந்த பாண்டவர்களிடத்தில் வந்து சொன்னார்கள். பீமன் 'துரியோதன னுக்குத் தகுந்த தண்டனை கிடைத்தது. அவன் அப்படியே பகை வனிடத்தில் கிடந்து அழிந்துபோகட்டும். துஷ் டர்கள் தண்டனையால்தான் திருந்தவேண்டும்' என்று சொல்லிவிட்டான். அப்போது மூத்தவ ரான தருமபுத்திரர் அவனை அதட்டிப் 'பீமா! அப்படிச் சொல்லாதே; துரியோதனன் நமக்கு ஒன்றுவிட்ட சகோதரனல்லவா? அவன் நமக்குச் செய்த குற்றங்களைப் பாராட்டுவதற்கு இது சமய மன்று; குற்றம் செய்யாதவர் என்று ஒருவரும் ஏற்பட மாட்டார்கள்; நமக்குச் செய்த குற்றத் திற்கு நாம் சிக்ஷை விதிக்கவேண்டுமே யல்லாமல் வேறொருவர் செய்யக்கூடாது. நம்முடைய சகோ தரனைப் பகைவன் பிடித்துக்கொண்டு போவது சூரர்களான நமக்கு அவமான மல்லவா? ஆத லால் உடனே புறப்பட்டுச் சென்று அவனை மீட் டுக்கொண்டு வா! உனக்குத் துணையாக அர்ச் சுனனையும் அழைததுக்கொண்டு போ!' என்று சொன்னார். பீமன் அறிவு தெளிந்து அப் பொழுதே அர்ச்சுனனோடு சென்று சித்திராங் கனை எதிர்த்துத் துரியோதனனை மீட்டுவந்தான். பிற்பாடு, தருமபுத்திரர் துரியோதனனைத் தழுவிக் கொண்டு அவனுக்கும் நல்லபுத்தி சொல்லி யனுப் பினர். ஆதலால், ஒருவனுடைய ஆபத்துச் சம யத்தில் அவன்செய்த குற்றங்களைப் பாராட்ட லாகாது.

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.

(இ-ள்.) குற்றம் — குற்றங்கள், ஒன்றும்—ஒன்றை யும், பாராட்டி—செய்தார்கள் என்று சொல்லி, திரியவேண்டாம்—(நீ) திரியாதே.

## 20. 10-வது கதையைப் படித்துக்கொள்க.

கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்.) கொலை — கொல்லுதலையும், களவு—திருடுதலையும், செய்வாரோடு—செய்கின்றவர்களுடன், இணங்க வேண்டாம்—(நீ) சிநேகம் செய்யாதே.

21. கதை :—முன்பு சோழநாட்டில் கம்பர் என்று ஒரு பண்டிதர் இருந்தார். அவருக்குக் கவிச் சக்ரவர்த்தி என்று அரசர்கள் பட்டம் கொடுத்திருந்தார்கள். ஒரு சமயத்தில் உறையூர்ப் பட்டணத்தை ஆண்டுவந்த குமார குலோத்துங்கன் என்ற சோழராஜன் அவர்மேல் துவேஷம் பாராட்டித் தூஷித்து 'இனி நீர் என் சபையில் இருக்கவேண்டாம். இஷ்டமான விடத்துக்குச் செல்லும்' என்று சொன்னான். கம்பர் 'அரசனே! நான் உன்னைக் கண்டு தமிழைப் படிக்க வில்லை. உலகத்தில் எனக்கு மரியாதை செய்வதற்கு எத்தனையோ அரசர் இருக்கிறார்கள். உன்னிலும் பெரிய அரசனை எனக்குப் பணிவிடைசெய்ய வைத்துக்கொண்டு நான் உன்னிடத்துக்குத் திரும்பி வருகிறேன்' என்று சபதம் செய்து உடுத்த வஸ்திரத்தோடு வெளியில் சென்று விட்டார். அவர் மற்றொரு சமயத்தில் உறையூர்ப் பட்டணத்துக்கு வந்தார். பிரதாபருத்திரன் என்ற பெரிய வரசன் அவருக்குப் பக்கத்தில் நின்று

வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அதனைக்கண்ட சோழராஜன் அதிக வெட்கப்பட்டு அவரிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பிரதாபருத்திரனும் புலவர்களை அவமானம் பண்ணலாகாதென்று அவனுக்குப் புத்தி சொல்லி விடை பெற்றுக்கொண்டு போனான். ஆதலால், பண்டிதர்களைப் பழித்துப் பேசலாகாது.

கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்

(இ-ள்) *கற்றவரை—படித்தவர்களை, ஒருநாளும்—ஒருதினமும, பழிக்கவேண்டாம்—(நீ) பழித்துப் பேசாதே.*

**22.** கதை:—வேதகாலத்துக்கு முன்பு இலங்கைப் பட்டணத்தில் இராவணன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவன் ஒருவராலும் வெல்ல முடியாதவன். பலததிலும் பராக்கிரமத்திலும் மிகுந்தவன். அவன் கொடுங்கோலைக் கேட்டுக் குழந்தைகளும் பயப்படும். அவன் ஒரு தடவை தண்டகாரணியத்துக்கு வந்திருக்கும்போது ஒரு தழைக் குடிசையைக் கண்டான். அதில் ஒரு பெண்மணியிருந்தாள். அவள் குற்றமில்லாத குணத்தைக் கொண்டவள். அழகில் மிகுந்தவள். இராவணன் அவளைக் கண்டு ‘தாகத்துக்குத் தண்ணீர் வேண்டும்’ என்று கேட்டான். அவள் கொண்டுவந்து கொடுத்தாள். அவன் பிற்பாடு தன்னைத் தெரிவித்துக்கொண்டு ‘அழகுள்ளவளே! நீ யார்? உன் பெயர் என்ன? இந்தக் காட்டில் ஏன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாய்? என் பட்டணத்துக்கு வா ! உன்னைக் கவுரவமாகவைத்து நடத்தி வருகிறேன்’ என்று சொன்னான். அந்தப் பெண்

மணி 'என் பெயர் சீதை. எனக்குத் தலைவர் இருக்கிறார். அவர் உன்னிலும் அதிக சூரர். அவரை இராமன்' என்று அழைப்பார்கள். அவரும் அவர் சகோதரரும் இப்போது மான் வேட்டைக்குப் போயிருக்கிறார்கள். நான் உன் வீட்டுக்கு வரத் தக்கவளன்று' என்று சொல்லிவிட்டாள். இராவணன் அவள் தன்னை அவமானப் படுத்தினாள் என்று கோபித்து அவளைப் பலவந்தமாகத் தூக்கித் தேரில் வைத்துக்கொண்டு இலங்கைப் பட்டணத்துக்குப் போய்விட்டான். பிற்பாடு, இராமனுக்குச் சங்கதி தெரிந்தது. அவன் சுக்கிரீவன் முதலான குரங்கு வீரர்களைக் கூட்டிக்கொண்டு போய் இலங்கைப் பட்டணத்தை முற்றுகையிட்டான். இராவணன் அதனைத் தடுத்துக்கொள்ள முடியாமல் அந்தச் சண்டையில் அநியாயமாக இறந்து போனான். அவன் சீதையைத் தூக்கிவராதிருந்தால் அப்படி இறந்திருக்க வேண்டாமல்லவா?

கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்.

(இ-ள்.) *கற்பு உடைய — கற்புள்ள, மங்கையரை — பெண்களை, கருதவேண்டாம் — (நீ) விரும்பாதே.*

23. **கதை**:—ஒரு சமயத்தில் இராஜகேசரி என்னும் அரசன் கலிங்கநாட்டை வெல்லவேண்டும் என்று படைவீரர்களைக் கூட்டிக்கொண்டு போனான். அவன் தன் வீரர்களுக்கு 'இன்றிரவு எவரும் விளக்கேற்றிக் கொள்ளவேண்டாம். ஏனென்றால், நாம் இங்குத் தங்கியிருப்பது பகைவர்களுக்குத் தெரியலாகாது' என்று கட்டளையிட்டிருந்தான். அன்றிரவு நடுச்சாமத்தில் ஒரு வீர

னுடைய கூடாரத்தில் மாத்திரம் ஒரு சிறிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அரசன் உள்ளே நுழைந்து பார்க்கும்போது அவ்வீரன் கீழே உட்கார்ந்து ஓர் எழுதின கடிதத்தை மடித்து முத்திரை வைக்கப்போனான். அரசன் பின்னால் சென்று 'வீரனே! என் கட்டளையை ஏன் அவமதித்தாய்?' என்று கேட்டான். அவன் திரும்பிப் பார்த்து வணங்கிப் 'பிரபு! இஃது ஓர் அவசரக் கடிதம். மனைவிக்கு எழுதினேன். மிகவும் அவசியமான விஷயம். மன்னிக்கவேண்டும்' என்று சொன்னான். அரசன் 'அப்படியா! சந்தோஷம்; கடிதத்தை முத்திரை வைக்காதே; அதனைப் பிரித்து 'இந்தக் கடிதம் உன்னிடத்தில் சேருமுன் நான் அரசர் உத்தரவை எதிர்த்து நடந்ததற்காக அவரால் சுடப்பட்டு இறந்துபோயிருப்பேன்' என்ற வாக்கியத்தையும் எழுதிவிடு!' என்றான். வீரன் அவ்வாறே எழுதி முத்திரைவைத்த பிற்பாடு, அம்மன்னவன் அவனுக்கு அப்பொழுதே மரணதண்டனை விதித்துவிட்டான். ஆதலால், அரசன் கட்டளையை எதிர்த்து நடக்கக்கூடாது.

கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்.

(இ-ள்.) *கொற்றவனோடு — அரசன் கட்டளையோடு, எதிர்மாறு—எதிர்த்த வார்த்தைகளை, பேசவேண்டாம்— (நீ) பேசாதே.*

24. கதை:—ஓர் ஊரில் நாராயணன் கோபாலன் என்று இரண்டு சகோதரர் இருந்தார்கள். அவர்கள் ஏழைக் குடும்பத்தில் பிறந்தபடியினால் நாராயணன் திருவரங்கத்துக்கும் கோபாலன் மருதூருக்கும் போய்ச் சில பிரபுக்களின் ஆதரவில்

படித்துவரத் தொடங்கினர்கள். அவர்களில் நாரா யணன் ஒவ்வொரு நாளும் மாலைவேளையில் கோயி லுக்குச் சென்று கடவுளை வணங்கியும், பெரியவர் களைக் கண்டு பேசியும், கடவுள் நமக்குச் செய்து வரும் உதவிகளை அவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்துகொண்டும் வந்தான். கோபாலன் மரு தூரில் இருந்த ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து அங்குள்ளவர்களோடு பழகினன். அவர் கள் கடவுள் பக்தியைக் கனவிலும் அறியமாட்டார் கள். கோயில் இருந்தால்தானே கடவுள் பக்தி உண்டாகும். சில வருஷங்களுக்குப் பிற்பாடு இரு வரும் தங்கள் படிப்பை முடித்துக்கொண்டு வந்து விட்டார்கள். நாராயணனிடத்தில் படிப்பும் கட வுள் பக்தியும் கலந்து காணப்பட்டன. அவ் விரண்டாலும் அவன் நல்லொழுக்க முள்ளவ னக விளங்கினன். கோபாலன் கடவுள் பக்தி யென்பதைக் கொஞ்சமும் அறியாதிருந்தபடியி னல் அவன் ஒழுக்கம் சரியானபடி திருத்த மடைய வில்லை. பிற்பாடு, அவ்விருவரும் திருவாங்கூர் மகாராஜாவினிடத்தில் உத்தியோகம் பெறப் போனர்கள். மகாராஜா அவர்கள் மனுவைக் கேட்டு இருவருக்கும் இரண்டு உத்தியோகம் கொடுத்தார். சில வருஷங்களில் நாராயணன் நல்லவன், யோக்கியன், உண்மையுள்ளவன் என்று யாவராலும் புகழப்பட்டு வந்தான். கோபாலன் கடவுள் பக்தியை அறியாதிருந்தபடியினல் அதி காரம் வந்த மாத்திரத்தில் கெட்டவர்களுடன் சக வாசம் செய்து மனம்போனபடி நடந்துவரத் தொடங்கினன். அவனை எல்லாரும் "சீ! சீர

துஷ்டன்! துஷ்டன்!!" என்று தூஷிக்கத் தொடங்கினர்கள். பின்பு அவ்விரண்டும் மகாராஜாவுக்குத் தெரிந்தது. அவர் அப்புறம் நாராயணனைத் தமக்கு இரண்டாவது மந்திரியாக நியமித்துக்கொண்டு கோபாலனை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். நாராயணன் வேலையில் உயர்வடைந்ததற்குக் கடவுள் பக்தியும் கோபாலன் தாழ்ந்துபோனதற்கு அஃதில்லாமையுமே காரணமாக நின்றன. ஆதலால், நாமும் கோயில் உள்ள விடத்திலிருந்தால் கடவுள் பக்தியும் அதனால் நல்லொழுக்கமும் உண்டாகும்.

கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டாம்.

(இ-ள்.) கோயில இல்லா—சுவாமி கோவில் இல்லாத, ஊரில—கிராமத்தில், குடி இருக்கவேண்டாம்—(நீ) குடியிராதே.

---

25. * * *

26. * * *

27. கதை:—ஒருகாட்டில் அஞ்சனுசலம் என்று ஒரு பெரிய யானை இருந்தது. அது அந்தக் காட்டில் மனம்போனபடி உலாவித் திரிந்து இளந்தழைகளை மேய்ந்து கம்பீரமாகச் சஞ்சரித்து வரும். மற்றொரு சமயத்தில் காட்டில் இருந்த எல்லா மிருகங்களும் அந்த யானையையே தங்களுக்கு அரசனுக நியமித்துக் கொண்டன. யானை தன் பெருந்தன்மையினுலும் நீதியினுலும் அம் மிருகங்களை அடக்கி ஆண்டுவந்தது. ஒரு நாள் அது அந்தக்காட்டில் உலாவிவருகையில் ஓரிடத்தில் செழிப்புள்ள கரும்பைக் கண்டது.

ஐயோ பாவம்! அதற்கு உண்மை தெரியவில்லை. எல்லா யானைகளுக்கும் கரும்பின்மேல் அதிக ஆசைஉண்டு. ஆதலால், அது கரும்பைத் தின்ப தற்கு ஆசைப்பட்டுச் சமீபத்தில் போயிற்று. அவ் வளவுதான் தாமசம்! அங்கே காலை வைத்தமாத்தி ரத்தில் அதன் முன்னங்கால் இரண்டும் உள்ளே இழுத்துக் கொண்டதனால் அந்தப் பெரிய யானை அப்படியே ஆழமான பள்ளத்தில் விழுந்து விட்டது. பிள்ளைகளே! ஏன் விழுந்துவிட்டது தெரியுமா? சில மனிதர்கள் அந்த யானையைப் பிடிக்கவேண்டுமென்று ஆழமான பள்ளம் வெட்டி அதனை மூங்கில்களால் மூடிக் கரும்பை நட்டிருந் தார்கள். அதற்குப் படுகுழி என்று பேர். யானை கால் வைத்ததும் மூங்கில்கள் முரிந்துபோன தனால் அது குழியில் விழுந்துவிட்டது. அப்புறம் கரை யேறுவதற்கு அதனால் முடியவே யில்லை. உடனே அம்மனிதர்கள் அதனைச் சங்கிலிபோட் டுக் கட்டிவிட்டார்கள். ஆதலால், நாமும் அந்த யானையைப்போல ஆலோசனை யில்லாமல் படுகுழி போன்ற அபாயத்தில் அகப்படக்கூடாது.

வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்.

(இ-ள்.) வீழாத—விழக்கூடாத, படுகுழியில்—(படுகுழி போன்ற) அபாயங்களில், வீழவேண்டாம்—(நீ) விழாதே.

28. கதை :—ஒரு காட்டில் இரண்டு சிங்கக் குட்டிகளோடு ஒரு நரிக்குட்டியும் சேர்ந்து விளை யாடி வந்தது. குழந்தைகளுக்குத் துணையாக இருக்கட்டுமென்று தாய்ச் சிங்கம் நரிக்குட்டிக்கு ஆகாரம் கொடுத்துக் காப்பாற்றிற்று. சில வருஷ

களில் அம்மூன்று குட்டிகளும் தாங்களே தனித்து வேட்டை யாடும்படியான பிராயத்தை அடைந்தன.. ஒரு நாள் அம்மூன்றும் காட்டில் திரிந்து வருகையில் ஒரு பெரிய யானையைக் கண்டன. அந்த யானை சிங்கக்குட்டிகளைக்கண்டதும் பயந்து தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறத் தொடங்கிற்று. உடனே, சிங்கங்கள் அதன்மேற் பாய்ந்து தலையிலும் முகத்திலும் அறைந்து காயப்படுத்தின. யானையும் சும்மா விருக்கவில்லை. தன் தும்பிக்கையினால் சிங்கங்களையும் அறைந்து காயப்படுத்திற்று. நரிக்குட்டி ஒருநாளாவது அப்படிப்பட்ட சதத்தைக் கேட்டிராதபடியினால் பயந்து ' சகோதரர்களே ! ஆபத்து வந்துவிட்டது ; வந்து விடுங்கள் ! வந்து விடுங்கள் !'' என்று கூவிக்கொண்டு 'செத்தேன்! பிழைத்தேன்!' என்று ஓடத் தொடங்கிற்று. சிங்கங்கள் சத்துருவைக் கொல்லவராமல் தன்னுடைய உயிரை மாத்திரம் காப்பாற்றிக்கொள்ள வோடின நரியை அப்பொழுதே அறைந்து கொன்று விட்டன. ஆதலால், நாமும் நரியைப் போலப் பகைவரைக் கண்டு பயந்து ஓடலாகாது.

வெஞ்சமரில் புறங்கொடுத்து மீள வேண்டாம்.

(இ-ள்.) வெம்சமரில்—கொடிய சண்டையில், புறம் கொடுத்து—(பகைவனுக்கு) முதுகு காட்டிக்கொண்டு, மீள வேண்டாம்—(நீ) திரும்பாதே.

---

29. கதை:—வெகுகாலத்துக்கு முன்பு வங்க தசத்திலிருந்த ஓர் அரசகுமாரன் வண்ணுைடு சிநேகம் செய்துவந்தான். அவன் பட்டத்துக்கு வந்த பிற்பாடு வண்ணனைக் கூப்பிட்டு

உனக்கு என்னவேண்டும் ?' என்று கேட்டான். வண்ணான் "மகாராஜாவே! நான் தங்களுக்கு மந்திரியாவதற்கு விரும்புகிறேன்" என்று சொன்னான். அம் மூடவரசன் கொஞ்சமும் ஆலோசனை பண்ணாமல் பழைய மந்திரியை நீக்கிவிட்டு அந்த வேலைக்கு வண்ணானை வைத்துக்கொண்டான். அவ்விஷயம் அவன் பகைவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் உடனே பெரிய சேனைகளைக் கூட்டிக்கொண்டு அவனோடு சண்டை செய்வதற்கு வந்தார்கள். அப்போது அரசன் மந்திரியைப் பார்த்து 'அவர்களை எப்படி வெல்லலாம்?' என்று கேட்டான். வண்ணார மந்திரி "மகாராஜாவே! பயப்பட வேண்டாம்; தங்களைக் கைவிடமாட்டேன்; அது விஷயமாகத்தான் இப்போது ஆலோசனை செய்துகொண்டிருக்கிறேன்" என்றான். பின்பு பகைவர்கள் வந்து பட்டணத்தை வளைத்துப் பீரங்கிகளைப் பிரயோகம் பண்ணத் தொடங்கினார்கள். அப்புறம் அரசன் வண்ணானை 'என்ன ஆலோசனை பண்ணியிருக்கிறாய்! சீக்கிரம் சொல்?' என்றதற்கு, வண்ணான் 'மகாராஜாவே! தீர்மானித்து விட்டேன். அரசாட்சி செய்வது அதிக கஷ்டமானது. அந்தக் கஷ்டங்களை யெல்லாம் சத்துருக்களே எடுத்துக்கொள்ளட்டும். நான் முன்னே நூறுவீடுகளுக்குச் சலவை செய்து கொடுத்து ஜீவனம் செய்துவந்தேன். அதில் சரிபாதி தங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். இருவரும் மனக்கவலை யில்லாமல் சுகமாக வாழ்ந்து வரலாம்' என்றான். அதற்குள் சத்துருக்கள் உள்ளே நுழைந்து அரசனைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். வண்ணானோடு பழகி அவனை மந்தி

யாக வைத்துக்கொண்ட குற்றத்தினால் அந்த அரசனுக்கு இராஜ்யம் போய்விட்டது.

தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்.

(இ-ள்) தாழ்வான — (தனக்குத்) தாழ்மையாகிய, குலத்துடனே — குலத்தில் பிறந்தவர்களுடனே, சேர வேண்டாம்—(நீ) சேராதே.

30. கதை:—ஆதிகாலத்தில் அஸ்தினாபுரத்தில் தருமபுத்திரரும், துரியோதனனும் ஒருநாள் *சொக்கட்டான் ஆடினார்கள். சகுனியென்பவன் துரியோதனனுக்குத் துணையாக நின்று ஆட்டத்தை நடத்திவந்தான். அவ்வாட்டத்தில் தருமபுத்திரர் தமக்குச் சொந்தமான எல்லாவற்றையும் துரியோதனனுக்குத் தோற்றுவிட்டார். துரியோதனன் மோச எண்ணத்தினால் அவரை அப்புறங்கூட ஒரு ஆட்டம் ஆடப் பண்ணினான். அதுவும் தோற்றுப்போனதனால் அவரும் தம்பிமார்களும் துரியோதனனுக்கு அடிமைகளாகத் தாழ்ந்துபோனார்கள். துரியோதனன் ஐந்துபேரையும் இராஜ சபையில் நிற்கவைத்து அவர்கள் கட்டிக் கொண்டிருந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் கொடுத்துவிடும்படி சொன்னான். பாண்டவர் மறுத்துச் சொல்லாமல் அப்படியே கொடுத்து வேலைக்காரர்களுக்குச் சொந்தமான ஆடைகளைக் கட்டிக்கொண்டார்கள். துரியோதனன் அவ்வளவோடு திருப்தியடையாமல் துஷ்ட நண்பர்களோடு சேர்ந்து அந்தச் சபையில் அவர்

* சொற்கேட்டான் என்பது—சொக்கட்டான் என்று மருவி வழங்குகின்றது.

களைக் கெட்ட வார்த்தைகளினால் அதிகமாகத் திட்டியும் கைக்கொட்டிச் சிரித்தும் பலவிதமாக அவமானம்பண்ணத் தொடங்கினான். அப்போது பீமசேனன் கோபங் கொண்டு 'துஷ்டா! அநியாயமாக எங்களுக்கு அவமானத்தை உண்டுபண்ணினபடியினால் உன்னைக் கொன்று விடுகிறேன்' என்று சபதம் செய்தான். அவன் அப்படியே சில வருஷங்களுக்குப் பின்பு துரியோதனனோடு சண்டைசெய்து அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கொன்று விட்டான். துரியோதனன் அடிமைகளான பாண்டவர்களை அவமானப்படுத்தாதிருந்தால் அப்படி இறந்திருக்க வேண்டாமல்லவா?

தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

(இ-ள்.) தாழ்ந்தவரை—(தமக்குத் தாழ்ந்துபோனவர்களை, பொல்லாங்கு—கெட்ட வார்த்தைகள், சொல்ல வேண்டாம்—(நீ) சொல்லாதே.

31. கதை:—மதுரைப் பட்டணத்தில் சொக்கலிங்கம் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் பேச்சுக் கேட்பதில் அதிக ஆசை உள்ளவன். எந்த வேலை யிருந்தாலும், உபாத்தியாயர் எவ்வளவு கஷ்டமான பாடம் கொடுத்திருந்தாலும், அவன் அவற்றை அப்படியே விட்டுவிட்டு வம்பு பேசுகின்றவர்களின் வாயைப் பார்த்துக்கொண்டிருப்பான். ஆனால், அவன் துஷ்டத்தனமான காரியம் செய்யமாட்டான். படிப்பில் அவனுக்கு ஆசை இருந்தபோதிலும், அது நிறைவேறுவதில்லை. ஏனென்றால், வம்பு பேசுகின்றவர்களுடைய வாயைப் பார்த்துக்கொண்டு திரிவதனால்

அவனுக்குப் பாடம் படிக்கச் சாவகாசம் கிடைப்ப தில்லை. சில சமயங்களில் அவன் பகல் முழுவதும் போஜனம் பண்ணாமல்கூட வாய் பார்த்துக் கொண்டேயிருந்து விடுவதுமுண்டு. ஒரு நாள் அவன் தாயாருக்கு ஜ்வரத்தின்மேல் ஜன்னி கண்டு விட்டது. வைத்தியர் வந்து சொக்கலிங்கத்தைத் தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் மருந்து கொடுத்து 'வழியில் நில்லாதே; சீக்கிரம் கொண்டு போய்க் கொடு!' என்று சொல்லி யனுப்பினர். சொக்கலிங்கமும் அவசரமாகவே நடந்து வந்தான். ஆனால், நடுவழியில் சிலர் நின்று என்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். சொக்கலிங்கத்துக்கு அதனைக் கேளாமல் திரும்ப மனம் வரவில்லை. கொஞ்சம் கவனித்துப் போகலாம் என்று அங்கே சற்று நின்றான். அப்புறம் அவனுக்குக் கையில் மருந்திருப்பது மறந்து போயிற்று. இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக அவன் அப்படியேயிருந்து விட்டான். வார்த்தை முடிந்த பிற்பாடு அவசரமாக வீட்டுக்கு ஓடிவந்தான். அதற்குள் அவன் தாயார் ஜன்னி வேகத்தினால் இறந்துபோய் விட்டாள். வாய் பார்த்து நின்ற குற்றத்தினால் உண்டான கஷ்டம் சொக்கலிங்கத்துக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. அவனைப் போல நாமும் வம்பு பேசுகின்றவர்களின் வாயைப் பார்த்துக்கொண்டு திரியலாகாது.

வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரிய வேண்டாம்.

(இ-ள்.) வார்த்தை சொல்வார் — வம்பு வார்த்தை பகருகின்றவர்களுடைய, வாய்பார்த்து—வாயைப்பார்த்து, திரியவேண்டாம்—(நீ) திரியாதே.

## 32. 18-வது கதையைப் படித்துக்கொள்க.

மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.

(இ—ள்.) *மதியாதார்—(நம்மை) மதித்துப் பேசாதவர்களுடைய, தலைவாசல்—வீட்டுவாசலை, மிதிக்க வேண்டாம்—(நீ) மிதியாதே.*

—oo:※:oo—

33. கதை :—ஒரு இடையனிடத்தில் சில ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் இருந்தன. அவன் நாள்தோறும் நல்ல பசும்புல் உள்ளவிடத்தில் அவைகளை ஓட்டிக்கொண்டுபோய் மேய்ப்பான். சாயங்காலம் எல்லாவற்றையும் ஒரு கொட்டிலில் அடைத்துக் கண் விழித்துக் காப்பாற்றுவான். எல்லா ஆடுகளும் அவன் மேல் மிகவும் பக்ஷமாயிருந்தன. ஆனால், ஒரேயொரு ஆட்டுக்குட்டிக்கு மாத்திரம் அது இஷ்டமில்லாம லிருந்தது அது ஒரு நாள் தன் தாயைக்கண்டு “ அம்மா ஒவ்வொருநாளும் இவன் ஏன் நம்மைக் கொட்டிலில் அடைத்து வைக்கவேண்டும். அஃது எனக்குப் பெரிய வேதனையாக இருந்து வருகிறது; நிலா வெளிச்சத்தில் அங்கும் இங்குமாக ஆடித் திரிவதற்கு நான் ஆசைப்படுகிறேன் ” என்றது. தாய் ஆடு “குழந்தாய்! என் வார்த்தையைக் கேள்! உனக்கு ஞானம் இல்லை. நீ தனியாகக் காட்டில் திரியலாகாது. ஓநாய் முதலான சத்துருக்களால் அபாயம் நேரிடும். பத்திரமாகக் கொட்டிலிலேயே யிரு!” என்று புத்தி சொல்லிற்று. ஆனாலும், குட்டிக்கு அது சமாதானமாகவில்லை. அன்று சாயங்காலம் இடையன் ஆடுகளைக் கொட்டிலில் அடைக்கும்போது அந்த ஆட்டுக்குட்டி மாத்தி

ஒரு வேலியில் ஒளிந்துகொண்டது. பிற்பாடு அந்தக்குட்டி வெளியில் வந்து உல்லாசமாக உலாவிக் காட்டில் வெகுதூரம் போய்விட்டது. அப்போது புதரில் மறைந்திருந்த ஓநாய் ஒன்று திடீரென்று வந்து ஆட்டுக்குட்டியைக் கவ்விக் கொண்டது. அது 'ஐயோ! நான் மோசம் போனேன்; தாயின் வார்த்தையைக் கேட்டிருந்தால், இதனிடத்தில் அகப்பட்டிருக்க வேண்டாமல்லவா!' என்று அழுதது. அதற்குள் ஓநாய் அந்தக் குட்டியைக் கடித்துத் தின்றுவிட்டது. ஆதலால், நாம் பெரியவர்களின் வார்த்தையை அசட்டை பண்ணலாகாது.

மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.

(இ-ள்) மூத்தோர்—பெரியவர்கள், சொல்—சொல்லுகின்ற, வார்த்தைதனை — வார்த்தையை, மறக்கவேண்டாம்—(நீ) மறந்து போகாதே.

34. கதை:—வெகுகாலத்துக்கு முன்னே இந்தியாவில் அசுரர் என்று ஒரு ஜாதியார் இருந்தார்கள். அவர்களுக்கு முரட்டுக் குணமும் முன்கோபமும் அதிகமாக இருக்கும். அவர்களுக்குச் சாஸ்திரங்களும் நீதிகளும் தெரியும். ஆனால், ஒன்றையும் அநுசரித்து நடக்க மாட்டார்கள். அவர்களுக்குச் சுக்கிரன் என்று ஒரு குரு இருந்தார். அவர்கள் அவர் கட்டளையை மாத்திரம் அசட்டை பண்ணமாட்டார்கள். அவர் மிகவும் நல்லவர் நீதிகளை அறிந்து நடப்பவர். அவரிடத்தில் அவர்களுக்கு அதிகப் பழக்கம் இருந்தது. இறந்தவர்களைப் பிழைப்பிக்கின்ற அரியவித்தையை அவர் தெரிந்து கொண்டிருந்தார். அவ

ரிடத்தில் கசன் என்று ஒரு மாணக்கன் படித்து வந்தான். அசுரர்கள் குருவின் வித்தையைக் கற்றுப்போக வந்திருக்கிறான் என்று கோபம் கொண்டு அவனைக் கொன்று அவன் இரத்தத்தைத் தேனில் கலந்து குருவுக்குக் கொடுத்து விட்டார்கள். குரு தேனைக் குடித்த பிற்பாடு மாணக்கனைத் தேடத் தொடங்கினர். எங்கும் அவனைக் காணவில்லை. அப்புறம் ஞானத்தினால் அவன் தம் வயிற்றில் தங்கியிருப்பதை அறிந்து வித்தையின் வல்லமையினால் அவனுக்கு உயிர்வரப்பண்ணினார். பின்பு அவன் வெளியில் வருவதற்குத் தாம் கற்ற வித்தையை அவனுக்கு உபதேசமும் செய்தார். அப்புறம் கசன் அவர் வயிற்றைக் கிழித்து வெளியில் வந்து அவ்வித்தையினால் அவருக்கு உயிரை உண்டாக்கினான். ஆனால், குருவுக்கு மாத்திரம் அப்புறம் அந்த உயர்ந்த மந்திரம் பலிக்கவேயில்லை. முன் கோபத்தையுடைய அசுரர் பழக்கத்தினால் தமது உயர்ந்த வித்தையை இழக்க நேரிட்டதே யென்று அவர் மிகவும் வருத்தப்பட்டார். அவரைப்போல நாமும் முன் கோபம்கொண்ட முரடர்களோடு பழகலாகாது.

முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்.) *முன் கோபக்காரரோடு — முன் கோபம் கொண்ட முரடர்களுடன், இணங்கவேண்டாம்—(நீ) சிநேகம் பண்ணுதே.*

**35.** கதை:—முற்காலத்தில் வடமதுரைப் பட்டணத்தில் வசுதேவர் என்றவருக்குக் கண்ண என்று ஒரு புத்திரன் இருந்தான். அவன் அ

கும் நல்லொழுக்கமும் உள்ளவன். அவன் சாந்தீபினி என்ற குருவினிடத்தில் கல்வி கற்றுவந்தான், சில வருஷங்களில் குருவுக்குத் தெரிந்த எல்லா வித்தைகளும் அவனுக்குக் குறைவில்லாமல் வந்துவிட்டன. ஒருநாள் அவன் தகப்பனார் 'கண்ணா! உன்குரு உனக்குப் படிப்பு முடிந்துவிட்டதென்று சொன்னார். நீ இனி அரசாட்சியைக் கவனித்து வரவேண்டும். ஆதலால், குரு விரும்புகின்றவற்றைக் கொடுத்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வா!' என்று அனுப்பினார். கண்ணன் குருவை வணங்கித் தகப்பனார் கட்டளையைத் தெரிவித்தான். அவர் 'என் அன்புள்ள கண்ணா! நீ நல்ல பிள்ளை. இதுவரையில் நீ என் கட்டளையை நிறைவேற்றி வந்திருக்கிறாய். என் மனத்தில் ஒரு குறை இருந்துவருகிறது. எனக்கு ஒரே யொரு புத்திரன் இருந்தான். அவன் ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு தேச யாத்திரை போனான். இதுவரையில் வந்துசேரவில்லை. நீ எப்படியாவது அவனைக் கண்டுபிடித்து என்னிடம் ஒப்புவிக்கவேண்டும். அதுதான் எனக்குச் சந்தோஷமான குரு தக்ஷிணை' என்று சொன்னார். கண்ணன் 'அப்படியே ஒப்புவிக்கிறேன்' என்று விடை பெற்றுக்கொண்டு வந்து நண்பர்களும் தானுமாக நெடுநாள் வரையில் உலகத்தில் சுற்றித்திரிந்து குரு புத்திரனை அழைத்துக் கொண்டு வந்தான். அவன் அதற்காக அதிக வருத்தப் பட்டான். எப்படியாவது குருவுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணவேண்டும் என்று தன் கஷ்டத்தைப் பாராமல் காரியத்தைச் சாதித்

துக்கொண்டு வந்தான். ஆதலால், நாமும் வருத்தப்பட்டாவது குரு தக்ஷிணையைக் கொடுக்க வேண்டும்.

வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்.

(இ-ள்) வாத்தியார்—(கல்வி கற்பித்த) உபாத்தியாயருடைய, கூலியை—சம்பளத்தை (தக்ஷிணையை), வைத்திருக்க வேண்டாம்—(நீ) கொடாமல் வைத்திருக்காதே.

---

## 36. 10-வது கதையைப் படித்துக்கொள்க.

வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்) வழிபறித்து—(நடு) வழியில் (பிரயாணிகளை மடக்கிக் கொள்ளையிட்டு, திரிவாரோடு—திரிகின்றவர்களுடன், இணங்கவேண்டாம்—(நீ) சிநேகம் செய்யாதே.

37. கதை:—காசியில் ஒரு பிராமணத்தி ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்து வந்தாள். ஒரு நாள் அவள் தன்னுடைய இளங் குழந்தைக்கு அந்தக் கீரியைக் காவல் வைத்து நீராடப்போனாள். அப்போது ஒரு நல்லபாம்பு குழந்தையைக் கடிக்க வந்தது. கீரிப்பிள்ளை உடனே பாம்பைக் கடித்துக் கொன்றுவிட்டு வாயிற்படியில் வந்து நின்றது. பிராமணத்தி நீராடி வரும்போது இரத்தத்தோடு நிற்கும் கீரிப்பிள்ளையைக் கண்டு, அது தன் குழந்தையைக் கடித்துக் கொன்றுவிட்டதென்று எண்ணிக் கொண்டு, தான் கொண்டுவந்த தண்ணீர்க்குடத்தை அதன்மேல் போட்டுக் கொன்றுவிட்டாள். உள்ளேபோன பிற்பாடு, தொட்டிலில் குழந்தை விளையாடிக் கொண்டிருப்பதும் பாம்பு இறந்துகிடப்பதும் அவளுக்குத் தெரிந்தது. அப்

புறம் 'ஐயோ! ஆராய்ந்துபாராமல் கீரிப்பிள்ளையைக் கொன்றுவிட்டோமே!' என்று துக்கப்பட்டு அவளும் இறந்துபோனாள். ஆதலால், எந்தக்காரியத்தையும் ஆலோசித்துப்பாராமல் செய்யலாகாது.

கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்.

(இ-ள்) *கருதாமல்--ஆலோசித்துப் பாராமல், கருமங்கள் —(ஒருவிதமான) தொழிலையும், முடிக்க வேண்டாம்—(நீ) செய்து விடாதே.*

38. *கதை:*—ஒருநாள் பன்னிரண்டு பேர் ஓர் ஆற்று வெள்ளத்தில் இறங்கி மீன் பிடித்தார்கள். எல்லாரும் கரை யேறி வந்தபின்பு ஒருவன் எண்ணிப் பார்த்தான். அவனுக்குப் பதினொன்றுதான் கணக்கு ஆயிற்று. மற்றொருவன் எண்ணினான். அவனுக்கும் அப்படியே வந்தது. பிற்பாடு, வேறொருவன் 'நான் எண்ணுகிறேன்; எல்லாரும் சரியாக நில்லுங்கள்!' என்று சொல்லி ஒன்று, இரண்டு, என்று எண்ணினான். அவனுக்கும் பதினொன்றுதான் வந்தது. எண்ணினவர்களில் ஒருவனாவது தன்னைக் கணக்குக் கூட்டவில்லை. மற்றவர்களை மாத்திரம் எண்ணினால் பதினொன்றுக்கு மேல் எப்படி யிருக்கமுடியும்? கடைசியில் தங்களில் ஒருவன் ஆற்று வெள்ளத்தில் போய்விட்டான் என்று அவர்கள் அழத் தொடங்கினார்கள். அப்போது ஒரு விகடகவி குதிரைமேல் ஏறி அந்த இடத்துக்கு வந்தான். அவன் அவர்கள் துக்கத்தைக் கேட்டுச் சிரித்து 'நான் பன்னிரண்டாவது மனிதனைக் காட்டுகிறேன்; நீங்கள் இந்தச் சவுக்கினால் அந்தக் கணக்குப்படி அடி

படவேண்டும்' என்றான். அவர்கள் 'அப்படியே படுகிறோம்' என்று ஒப்புக்கொண்டார்கள். பின்பு அவன் அவர்களை வரிசையாக நிறுத்தி முதலில் இருந்தவனுக்கு ஓரடி, அடுத்தவனுக்கு இரண்டடி, அவனுக்கும் அடுத்து நின்றவனுக்கு மூன்றடி என்று ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு அடி அதிகமாக அடித்து வந்தான். முடிவில் இவன்தான் பன்னிரண்டாவது மனிதன் என்று கடைசியில் இருந்தவனைப் பன்னிரண்டு அடி யடித்தான். அவன் 'அப்பாடா! அப்பாடா!!' என்று அலறியழுதான். ஆனாலும், பன்னிரண்டாவது மனிதனைக் காட்டினதற்காக அவர்கள் எல்லாரும் அவனுக்கு வந்தனம் சொல்லிச் சந்தோஷமாகவே வீட்டுக்குப்போனார்கள். அவர்கள் சரியானபடி முதலில் கணக்கிட்டிருந்தால் அவனிடத்தில் அடிபட்டிருக்க வேண்டாமல்லவா?

கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்.

(இ-ள்.) கணக்கு அழிவை—தவறான கணக்குகளைப் ஒருநாளும—ஒருதினமும், பேச வேண்டாம—(நீ) பேசாதே.

39. கதை:—பெரிய பாளையத்து அம்மன் கோவிலில் இரண்டு ஆட்டுக்கடாக்கள் இருந்தன. அவ்விரண்டும் ஊரார் கொல்லைகளில் மேய்வது வழக்கம். பஞ்சம் இல்லாமல் தீனி கிடைத்து வந்ததனால் அவைகளுக்குக் கொழுப்பு அதிகமாகி ஒருநாள் ஒன்றை ஒன்று எதிர்த்துச் சண்டை செய்ய ஆரம்பித்தன. இரண்டும் கோபத்தோ மோதிக்கொண்டதனால் அவற்றின் தலையிலிருந்

இரத்தம் பெருக்த் தலைப்பட்டது. அப்போது உபாயத்தில் மிகுந்த ஒரு நரி அந்த இரத்தத்தைக் குடிப்பதற்கு ஆசைப்பட்டு வந்தது. கடாக்கள் வேகத்தோடு வந்து பாய்ந்தபடியினால் நரியின் தலை நடுவில் அகப்பட்டு உடைந்து போயிற்று. அப்புறம் அந்த நரி பிழைக்கவே யில்லை. அப் போதே இறந்துவிட்டது. ஆதலால், சண்டை செய்யும் இடத்துக்குப் போகலாகாது.

பொருவார்தம் போர்க்களத்தில் போக வேண்டாம்

(இ-ள்.) பொருவார்தம்—சண்டை செய்கின்றவர்களுடைய, போர்க்களத்தில்—யுத்தபூமியில், போகவேண்டாம்—(நீ) செல்லாதே.

40. கதை:—ஏறக்குறைய ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்பு அங்காரபர்ணன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் வில்வித்தையில் உயர்ந்தவன். அவன் ஒரு சமயத்தில் எல்லாருக்கும் பொதுவான கங்கையாற்றையும் அதன் கரைகளையும் வேலியிட்டுத் தடுத்து அநுபவித்துக் கொண்டு வந்தான். ஒருநாள் பாண்டவர் ஐந்து பேரும் தாயாரோடு கூடப் பாஞ்சாலன் பட்டணத்துக்குப் போனார்கள். அங்காரபர்ணன் வேலியிட்ட வழி அவர்களுக்குக் குறுக்கே யிருந்தது. 'வேலியைச் சுற்றிக்கொண்டு போவதா? அல்லது அதனைப் பிளந்துகொண்டு போவதா?' என்று அவர்கள் ஆலோசிக்கும்போது அர்ச்சுனன் "அண்ணா! ஆறும் ஆற்றங்கரையும் எல்லாருக்கும் பொது; அக்கிரமமாக அவ்விரண்டையும் வேலியிட்டுத் தடுத்திருக்கிறபடியினால் நாம் வேலியைப்

பிளந்து செல்லலாம்'' என்று சொல்லி வேலியை முரித்து அவர்களை அழைத்துக் கொண்டுபோனான். அங்கிருந்த வேலைக்காரர்கள் அங்காரபர்ணனுக்கு அதனைத் தெரியப்படுத்தினார்கள். அவன் உடனே வெளியில் வந்து அர்ச்சுனனை நில் நில் என்று அதட்டிச் சண்டை செய்யவந்தான். அப்போது அர்ச்சுனன் அவ்வரசன் விட்ட எல்லாப் பாணங்களையும் நாசப்படுத்தி அவனைக்கட்டி உருட்டி விட்டான். அங்காரபர்ணன் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாமல் அர்ச்சுனனைப் பணிந்து அவனுக்குச் சில குதிரைகளைக் காணிக்கை கொடுத்துச் சமாதானம் பண்ணிக் கொண்டான். அவன் எல்லாருக்கும் பொதுவாகிய கங்கைக்கரையை வேலியிட்டுத் தடுத்து வாசம் செய்யாவிட்டால், அர்ச்சுனனால் அவமானம் அடைந்திருக்க வேண்டாமல்லவா ?

போதுநிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்.

(இ—ள்.) பொதுநிலத்தில்—(எல்லாருக்கும்) பொதுவானவிடத்தில், ஒருநாளும்—ஒருதினமும், இருக்கவேண்டாம்—(நீ) குடியிராதே.

41. கதை :—நெடுங் காலத்துக்கு முன்பு அயோத்திப்பட்டணத்தில் தசரதர் என்று ஒரு பெரிய அரசர் இருந்தார். அவருக்கு மூன்று மனைவிகளும் நான்கு புத்திரர்களும் இருந்தார்கள். கௌசலை, கைகேயி, சுமித்திரை என்று மனைவிகளுக்குப்பெயர். இராமன், பரதன், இலக்ஷ்மணன், சத்ருக்னன் என்று பிள்ளைகளுக்குப் பேர். இராமன் மூத்த குமாரன். நான்கு பிள்ளைகளும் நன்றாக

கல்வி கற்று அரசாட்சியை ஆளும்படியான பிராயத்தை அடைந்தார்கள். தசரதர் இராமனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணுவதற்கு முகூர்த்தம் நிச்சயித்திருந்தார். எல்லாக் காரியங்களும் சித்தமாகி விட்டன. அப்போது கைகேயி தன் பிள்ளை பரதனுக்கே இராஜ்யத்தைக் கொடுக்கவேண்டு மென்றும், இராமனைப் பதினைந்து வருஷம் வரையில் வனவாசம் செய்ய அனுப்பவேண்டு மென்றும் பிடிவாதம் பண்ணினாள். ஏனென்றால், இராமன் கௌசல்யையின் பிள்ளை. மந்திரிகளும் குருக்களும்வந்து கைகேயிக்கு எவ்வளவோ சமாதானம் சொன்னார்கள். அவள் கொஞ்சமும் ஒப்பவில்லை. தனக்கு அந்த இரண்டு வரத்தையும் கொடுத்தே தீரவேண்டுமென்றும், இல்லாவிட்டால், இறப்பது நிச்சய மென்றும் சொல்லிவிட்டாள். பிற்பாடு அவள் எண்ணப்படி இராமன் பதினைந்து வருஷம் வனத்தில் வாசம் செய்யப்போனான். அது வரையில் அவள் புத்திரன் பரதன் அரசாட்சி செய்து வந்தான். அந்தப் பெரிய அரசர் அப்புறம் வெளியில் வருவதற்கு வெட்கப்பட்டு அந்தத் துக்கத்தினாலேயே மரணமடைந்தார். ஆதலால், ஒருவனுக்கு இரண்டு மூன்று மனைவிகள் இருக்கக் கூடாது.

இருதாரம் ஒருநாளும் கொள்ள வேண்டாம்.

(இ-ள்) இருதாரம—இரண்டுமனைவிகளை, ஒருநாளும—ஒருதினமும, கொள்ளவேண்டாம—(நீ) மணம செய்து கொள்ளாதே.

**42.** **கதை:**—ஒருநாள் காட்டில் ஒரு சிங்கம் மரத்தடியில் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தது. அப்போது ஒரு எலி தான்போகும் அவசரத்தினல் அதன் முகத்தில் தெரியாமல் ஏறிவிட்டது. உடனே சிங்கம் விழித்துக்கொண்டு எலியைக் கொல்லப்போயிற்று. எலி 'மகாராஜாவே! நான் வேண்டுமென்று குற்றம் பண்ணவில்லை. இது தற்செயலாக நேரிட்டது. என்னை மன்னிக்கவேண்டும்' என்று சொல்லிற்று. சிங்கம் 'எலியே! பயப்பட வேண்டாம். நீ அற்பப் பிராணி. நான் உன்னைக் கொல்லமாட்டேன். பராக்கிரமம் இல்லாத பூனைகள்தாம் உன்னைப் பிடித்துத் தின்னும். போ! போ!!' என்று சொல்லி அனுப்பிவிட்டது. ஆதலால், எளியவர்களோடு எதிரிட்டுக் கொள்ளலாகாது. பெருந்தன்மையைக் காட்டவேண்டும்.

எளியாரை எதிரிட்டுக் கோள்ள வேண்டாம்.

(இ-ள்) எளியாரை — எளியவர்களை, எதிரிட்டுக் கொள்ள வேண்டாம் (நீ) எதிர்த்துக் கொள்ளாதே.

**43.** 10-வது கதையைப் படித்துக்கொள்க.

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்.

(இ-ள்) சேராத—சேரத் தகக்கூடாத, இடம் தனிலே (துஷ்டர்கள்) இடத்திலே, சேரவேண்டாம்—(நீ) சேராதே.

**44.** 42 வது கதையில் சிங்கம் எலியை ஒன்றும்பண்ணுமல் விட்டுவிட்டதென்று படித்திருக்கிறீர்களல்லவா? ஒருநாள் அந்தச் சிங்கம் வேட்டைக்குப் போனவிடத்தில் ஒரு பெரிய வலையில்

சிக்கிக்கொண்டுவிட்டது. ஆனமட்டில் பிரயத்தனப்பட்டுங்கூட விடுவித்துக்கொள்ள முடியவில்லை. அதனால், சிங்கம் கோபங்கொண்டு அந்தக் காடுமுழுவதும் எதிரொலி கேட்கும்படி கர்ஜனை செய்தது. அவ்வொலியைக் கேட்ட மாத்திரத்தில் வளையில் மறைந்திருந்த எலி வெளியில் வந்து சிங்கத்தின் ஆபத்தைப்பார்த்து "மகாராஜாவே! கவலைப்பட வேண்டாம். ஏழையாகிய நான் முன்னொரு சமயத்தில் தங்களால் பிராணபிக்ஷை அடைந்திருக்கிறேன். அதுமுதல் தங்களுக்கு என்ன உபகாரம் செய்யலாமென்று இரவும் பகலும் எண்ணிவருகிறேன். இன்று என் எண்ணம் நிறைவேறி விட்டது. என்று சொல்லி அந்த வலையைத் தன் பற்களால் கடித்துத் துண்டம் செய்து சிங்கத்தை விடுவித்தது. ஆதலால், ஒருவர் செய்த உதவியை மறக்காமல் அவர்களுக்குப் பதிலுபகாரம் செய்யவேண்டும்.

செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

(இ-ள்) *செய்த—(ஒருவர் நமக்குச்) செய்த, உதவி—உபகாரத்தை, ஒருநாளும்—ஒருதினமும், மறக்கவேண்டாம்—(நீ) மறந்துபோகாதே.*

45. கதை :—காவேரிப் பட்டணத்தில் ஒரு பணக்காரன் இருந்தான். ஒருநாள் அவன் வீட்டுக்கு ஒரு சந்நியாசி வந்தான். பணக்காரனும் அவன் மனைவியும் சந்நியாசிக்கு அன்னம் படைத்தார்கள். அவன் வயிறுகொண்டமட்டும் உண்டு தலைக்கடைத் திண்ணையில் படுத்து இளைப்பாறினன். சற்றுநேரம் கழித்து வீட்டுக்காரி சந்நியாசி

யைக் கண்டாள். அவன் முதலில் அவளுக்குக் கடவுள் பக்தியைப்பற்றி உபதேசம் செய்தான். அந்தச் சந்நியாசி ஒரு பெரிய கலகக்காரன். அவனைப்போலக் கலகம் பண்ணுகின்றவர்கள் இருக்கவே மாட்டார்கள். அவன் வார்த்தை மேல் வார்த்தையாக! 'அம்மா! தாங்கள்பெரியபதிவிரதை. ஆனால், முற்பிறப்பில் உப்புக்குறவனாக இருந்தவன் இப்போது தங்களுக்குக் கணவனாக வந்திருக்கிறான். இதற்கு நான் மிகவும் விசனப்படுகிறேன். வேண்டுமானால், அவன் காலை நக்கிப்பாருங்கள்! உண்மை வெளியாகும்' என்றான். அவள் 'ஆகட்டும்; பரிக்ஷித்துப் பார்க்கிறேன்' என்று சொல்லி உள்ளே போய்விட்டாள். பிற்பாடு வீட்டுக்காரன் உபதேசம் கேட்கவந்தான். சந்நியாசி 'ஐயா! தாங்கள் மிகவும் நல்லவர். புண்ணியம் செய்தவர். ஆனால், முற்பிறப்பில் நாயாக இருந்தவள் இப்போது மனைவியாக வந்திருக்கிறாள். நான் இவ்வொன்றுக்குத்தான் விசனப்படுகிறேன் இன்றிரவு விழித்திருந்து பாருங்கள்! உங்களுக்கே உண்மை தெரியவரும்' என்று சொன்னான். அப்படியே அன்று நடுராத்திரியில் மனைவி புருஷன் காலை நக்கினாள். அவன் 'சீ சீ! நாயே!' என்று திட்டினான். அவள் 'சீ சீ! உப்புக்குறவா!!' என்று கூட்டினாள். இப்படி இருவரும் சண்டையிட்டுக்கொண்டு தெருவில் வந்தார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் அதன் காரணத்தைக் கேட்டுச் சந்நியாசியைப் பிடித்து நையப் புடைத்து அனுப்பினார்கள். சந்நியாசி உடம்புமுழுவதும் வீங்கி அழுதுகொண்ட வண்ணமே அயலூருக்குப் போனான். அவன் கலகம்

செய்யா திருந்தால், அடிபட்டிருக்க வேண்டா மல்லவா ?

ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்

(இ-ள்.) 'ஊரோடும்---ஊராரோடும், குண்டுணியாய்---கலகம் செய்கின்றவனாகி, திரியவேண்டாம்---(நீ) திரியாதே.

46. 19-வது கதையில் பாண்டவர்கள் வனவாசம் செய்யப் போனார்கள் என்று படித்திருக்கிறீர்களல்லவா? அவர்கள் வனவாசம் முடிந்த பிற்பாடு தங்களுடைய இராஜ்யபாகத்தை வாங்கிவரும்படி துரியோதனனிடத்துக்குக் கிருஷ்ணனைத் தூது அனுப்பினார்கள். கிருஷ்ணன் அஸ்தினாபுரத்துக்குப் போனபோது விதுரன் என்பவன் அவனுக்கு முதலில் விருந்து செய்து உபசாரம் பண்ணினான். இந்த விதுரன் துரியோதனனுக்குச் சிறிய தந்தையாகவேண்டும். மறுநாள் இராஜசபையில் 'விதுரன் தன் கட்டளையில்லாமல் கிருஷ்ணனுக்கு விருந்து செய்து உறவு கொண்டாடினான்' என்று துரியோதனன் அவனை 'இராஜத்துரோகி யென்றும், வெட்கம் கெட்டவனென்றும், இழிகுலத்தவனென்றும்' பலவாறு தூஷித்துப் பேசினான். விதுரன் அத்தூஷணை வார்த்தைகளைப் பொறுக்க முடியாமல் கோபங்கொண்டு 'மூடா! நான் இனி ஒருநாளும் உனக்கு உதவி செய்யமாட்டேன்' என்று சொல்லித் தன் பெரியவில்லை இரண்டாக வெட்டி யெறிந்து வெளியில் வந்துவிட்டான். பிற்பாடு, பாண்டவருக்கும் துரியோதனனுக்கும் பெருஞ் சண்டை உண்டாயிற்று. அந்தச் சண்டையில் துரியோதனன் விதுரனுடைய உதவியைக்

கொஞ்சமாவது அடையமுடியாமல் அபஜயத்தை யும் மரணத்தையும் சொந்தமாக்கிக் கொண்டான். ஆதலால், பந்துக்களைத் தூஷிக்கலாகாது.

உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்.

(இ-ள்.) *உற்றாரை—பந்துக்களை, உதாசினங்கள்—தூஷணவார்த்தைகள், சொல்ல வேண்டாம்—(நீ) சொல்லாதே.*

47. 41-வது கதையைப் படித்துக்கொள்க.

ஆதலால், பெரிய காரியங்களை எப்போதும் கெடுக்கலாகாது.

பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்.

(இ-ள்.) *பேரான—பெரிய, காரியத்தை—காரியங்களை, தவிர்க்கவேண்டாம்—(நீ) கெடுக்காதே.*

48. கதை:—புதுச்சேரியில் சங்கரன் கோபாலன் என்று இரண்டு நண்பர் இருந்தார்கள். சங்கரனுக்கு இருபது வேலி நிலம் உண்டு. கோபாலனுக்கு நிலம் கிடையாது. அவன் தானிய வியாபாரம் செய்து ஜீவனம் பண்ணிவந்தான். அவ்வூரில் வேறு சில வர்த்தகர்கள் வேர்க்கடலை வியாபாரம் செய்து விசேஷமான பணம் சம்பாதித்து வந்தார்கள். கோபாலன் தானும் அந்த வர்த்தகம் செய்து பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணினான். ஆனாலும், அதற்குத் தகுந்தமுதல் அவனிடத்தில் இல்லை. ஒருசமயத்தில் கோபாலன் 'சங்கரா! நான் வேர்க்கடலை வியாபாரம் செய்ய விரும்புகிறேன்; எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கிக்கொடு' என்று கேட்டான். சங்கரன் ஒரு சாவகாரியைக் கண்டு கோபாலனுக்குட்

பணம் தரும்படி சொன்னான். சாவகாரி 'இருவரும் எழுதிக்கொடுத்தால் தருகிறேன்' என்றான். சங்கரன் அப்படியே எழுதிக்கொடுத்து ரூபாயை வாங்கித்தந்தான். கோபாலனுக்கு முதல் இரண்டு வருஷத்தில் இரண்டாயிரம் ரூபாய் வீதம் லாபம் வந்தது. மூன்றாவது வருஷத்தில் அவன் அதிகமாக வேர்க்கடலை வாங்கிக் கட்டினான். அந்த வருஷம் கடைசிவரையில் விலை குறையாமல் ஏறிக்கொண்டேயிருந்தது. வியாபாரிகள் போட்ட பணத்தில் பாதியைக் கண்டு பிடிப்பதற்குங் கூடக் கஷ்டப்பட்டார்கள். கோபாலனுக்கு இரண்டாயிரம் ரூபாய்தான் மொத்தத்தில் உருவாயிற்று. எட்டாயிரம் நஷ்டமானதோடு லாபம் வந்த நாலாயிரமும் தொலைந்துபோய் விட்டது. அதற்குள் சாவகாரி தவணை நெருங்கிவிட்டதென்று பணத்துக்கு நிர்ப்பந்தப்படுத்தினான். சங்கரன் வாயைத் திறவாமல் சொந்த நிலங்களை விற்றுத் தொகையைக் கொடுத்துத் தீர்த்தான். அந்த வகையில் அவனுக்கு எட்டு வேலி நிலம் போய்விட்டது. அப்புறம் சங்கரனுக்கு அந்தப் பணம் திரும்பவேயில்லை. ஆதலால், ஒருவனுக்குப் பதிலாக நான் தருகிறேன் என்று ஒன்றையும் ஏற்றுக் கொள்ளலாகாது.

பிணைபட்டுத் துணைபோய்நீ திரிய வேண்டாம்.

(இ-ள்.) *பிணைபட்டு—(ஒருவனுக்காக நான் தருகிறேன் என்று) பாத்தியப்பட்டு, துணைபோய்—(அவனுக்குத்) துணையாகச், சென்று, திரியவேண்டாம்—(நீ) திரியாதே.*

—ooo—

49. * * * *

50. கதை:—ஒரு காட்டில் சில முயல்கள் ஒன்றுகூடி வசித்துவந்தன. ஒருநாள் அந்தக் காட்டில் திடீரென்று ஒரு சத்தம் உண்டாயிற்று. முயல்கள் தங்களுக்கு என்னவோ ஆபத்து வந்து விட்டதென்று பயந்து வெகு தூரம் ஓடின. அங்கே ஓர் இடைப்பையன் ஆடுமேய்த்துக் கொண்டிருந்தான். அவன் அம் முயல்களைப் பார்த்து ஓ ஓ வென்று கூச்சல் போட்டான். அவை கள் இன்னும் பயங்கொண்டு காட்டின்பக்கமாகத் திரும்பியோடின. நன்ருகக் கால்நோவெடுத்து அலுக்கும் வரையில் அவைகள் ஓட்டத்தை நிறுத்தவில்லை. பிற்பாடு எல்லா முயல்களும் ஓரி டத்தில் நின்று 'சீ! நம்முடைய பிழைப்பும் ஒரு பிழைப்பாகுமா? எந்நேரமும் பயந்த வண்ண மாகவே காலம்கழித்து வருகிறோம். நாய்கள், நரிகள், புலிகள், வேட்டைக்காரர்கள்; ஒன்ரு? இரண்டா? உலகமுழுவதும் நமக்குப் பகைவர் கள் நிரம்பியிருக்கிறார்கள். இரவும் பகலும் என்ன வருமோ என்ன வருமோ வென்று இப்படிப் பயந்து காலம் கழிப்பதைவிட அதோ தெரியும் ஏரியில் எல்லாருமாக விழுந்து இறந்துபோக லாம்' என்று தீர்மானித்துக் கூட்டமாக ஏரிக்கு வந்தன. அப்போது கரையில் உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்த தவளைகள் அவற்றைக் கண்டு அஞ்சித் தண்ணீரில் முழுகின. அவைகளை யெல்லாம் நன்ருகக் கவனித்துவந்த ஒரு காக்கை, அவற்றின் சமீபம் வந்து 'சகோதரர்களே! ஆத் திரப்பட்டுப் பிராணனைப் போக்கிக்கொள்ள வேண்

டாம்! உங்களைப்போலவே இந்தத் தவளைகளும் பயப்பட்டுத் தண்ணீரில் முழுகிவிட்டன. துப்பாக்கி முதலான சத்தங்களைக் கேட்டால் நானும் பயந்து ஆகாயத்தில் பறந்துபோகிறேன். உலகத்தில் உள்ள எல்லாப் பிராணிகளும் நம்மைப் போலவே பயந்துகொண்டுதான் காலம் கழிக்கின்றன. ஆதலால், வீணாகவே மனம் சலித்துப் பிராணனைப் போக்கிக்கொள்ள வேண்டாம்' என்று புத்திசொல்லிப் போயிற்று. முயல்களும் அறிவு தெளிந்து இருப்பிடத்துக்குப் போயின.

மனம்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்.

(இ-ள்.) மனம் சலித்து — மனம் சலிப்படைந்து (வெறுத்து), சிலுகிட்டு—குறை சொல்லிக்கொண்டு, திரிய வேண்டாம்—(நீ) திரியாதே.

51. கதை:—ஒருநாள் ஓர் ஏழை ஒரு பெரிய வீட்டில் நுழைந்து பிச்சை கேட்டான். வீட்டுக்காரன் அறுந்த விரலுக்கும் சுண்ணாம்பு கொடுக்காத ஒரு பெரியலோபி. அவன் 'அப்பா! என்ன செய்யலாம்! கடவுள் ஏழை மனிதர்களையே அதிகமாகச் சோதனைசெய்கிறார். உனக்குச் செல்வமிருந்தால் இந்தப் பாழும்பிச்சைக்கு வந்திருக்க மாட்டாயல்லவா?' என்று சற்றுநேரம் கண்ணீர் விட்டு, அதோ தெரியும் கடையில் ரொட்டி வாங்கிவந்து இருவரும் உண்ணலாம் வா!' என்று அவனை அழைத்துக்கொண்டு போய்க் கடைக்காரனைப்பார்த்து 'நல்ல ரொட்டி இருக்கிறதா?' என்று கேட்டான். கடைக்காரன் 'ஐயா! முதல்தரமான ரொட்டி; வெண்ணெயைப்போல வெளுப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும்' என்றான்.

லோபி பிச்சைக்காரனை நோக்கிப் 'பார்த்தாயா? இவன்சொல்வதில் ரொட்டியைக்காட்டிலும்வெண்ணெய் உயர்ந்ததென்று தெரிகிறது. ஆதலால், நாம் வெண்ணெயே வாங்கிக்கொள்ளலாம் வா!' என்றுவெண்ணெய்க்கடைக்குப்போனான். அங்கே 'நல்ல வெண்ணெய் இருக்கிறதா' என்றதற்கு 'ஐயா! புது வெண்ணெய்; எண்ணெயைப்போலத் தெளிவாக இருக்கிறது' என்று அந்த வர்த்தகன் சொன்னான். உலோபி 'இவன் வார்த்தையினால் எண்ணெய் சிறந்ததாகத் தெரிகிறது; வா! எண்ணெய்க் கடைக்குப் போகலாம்' என்று அங்குப் போய் 'நல்ல எண்ணெய் இருக்கிறதா' என்றான். கடைக்காரன் 'ஐயா! முதல்தரமான எண்ணெய்; இதோ பாருங்கள்! தண்ணீரைப்போல நன்றாய்த் தெளிந்திருக்கிறது' என்று காட்டினான். உலோபி 'அப்பா! கேட்டாயல்லவா? இதனால் எல்லாவற்றிலும் தண்ணீர் உயர்ந்ததென்று ஏற்படுகின்றது. இனி வா! வீட்டுக்குப் போகலாம்' என்று அவனை அழைத்து வந்து தண்ணீரைக் கொடுத்தான். ஏழை 'என்ன ஐயா! ஊரெல்லாம் சுற்றவடித்துத் தண்ணீரைத் தருகிறீர்கள்? இந்த நீர் குளத்தில் கிடைக்கமாட்டாதா?' என்று சலிப்பாய்க் கூறினான். உலோபி! நீ சொல்வதும் நிச்சயமானதுதான். சுத்தமும் புதிதுமான தண்ணீரைக் குளத்திலிருந்து வேண்டுமளவு எடுத்துக்கொள்ளலாம். ஐயோ! பாவம்! வேறு ஒன்றும் என்னிடத்தில் இல்லையே! நீ என்னசெய்வாய்! பசி! இந்தத் தெருக்கோடியில் தான் குளமும் இருக்கிறது. போய்ச் சீக்கிரம் சாப்பிட்டு வா!' என்று கண்ணீர்விட்டுச் சொல்லியனுப்பினான்.

பிச்சைக்காரன் துக்கப்பட்டுக்கொண்டு வேறு வீட்டுக்குப் போனான். ஆதலால், நாம் ஒருவனைக் கண்டு வாயினால் துக்கப்பட்டுக் கண்ணீர் விடுவதைக்காட்டிலும் பிச்சையிடுவது சிரேஷ்டமானது.

கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்.

(இ-ள்.) *கண் அழிவுசெய்து—(பிச்சைக்காரர்களைக் கண்டு) கண்ணீர்விட்டுக் கலங்கி யழுது, துயர்—துன்பத்தை, காட்டவேண்டாம்—(நீ) காட்டாதே.*

52. கதை:—*ஒருகாலத்தில் பிரமனும் விஷ்ணுவும் சிவபெருமானுடைய முடியையும் அடியையும் கண்டுபிடிக்கப் போனார்கள். பிரமன் அன்னப் பறவை வடிவமாக ஆகாயத்தில் நெடுந்தூரம் வரையில் பறந்து பார்த்துங் கூடக் கடவுள் முடி அதற்கு மேலும் வளர்ந்திருந்தது. அவன் என்ன செய்யலாம் என்று யோசிக்கும் தருணத்தில் ஒரு தாழைமலரைப் பார்த்தான். அது நிலத்தை நோக்கி வந்துகொண்டிருந்தது. பிரமன் 'நீ எங்கிருந்து வருகிறாய்?' என்று கேட்டதற்கு, அம்மலர் 'கடவுள் சிரத்திலிருந்து வருகிறேன்' என்று சொல்லிற்று. அவன் அம்மலரைத் தனக்குச் சாக்ஷி சொல்லும்படி ஏற்பாடு செய்துகொண்டு நிலத்துக்கு வந்து 'நான் கடவுள் முடியைக் கண்டு வந்திருக்கிறேன்; அதற்கு இந்த மலர் சாக்ஷி' என்று சொன்னான். தாழைமலரும் "ஆம், இவர் கண்டார்; நான்பார்த்தேன்' என்று பொய்பேசிற்று. அச்சமயத்தில் கடவுள் கோபத்தோடு தோன்றிப் பொய்ச் சாக்ஷி சொன்ன தாழைமலர் இனித் தம் பூஜைக்கு உதவாது என்றும், பொய் பேசின பிரமனுக்கு உலகத்தில் கோயில் இராது என்றும்*

சொல்லி மறைந்தார். அதுமுதல் தாழைமலர் சிவபெருமான் பூசைக்கு யோக்கியமில்லாமற் போயிற்று. பிரமனுக்கும் கோயில் கட்டுவதில்லை. ஆதலால், எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் காணாதவிஷயங்களைக் கண்டதாகப் பொய் சொல்லக்கூடாது.

காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்.

(இ-ள்) காணாத—கண்ணால் பாராத (காரியத்தின் சம்பந்தமான), வார்த்தையை—(பொய்)வசனங்களை, கட்டுரைக்க வேண்டாம்—(நீ கண்டேனென்று) உறுதியாகச் சொல்லாதே.

53. 46 வது கதையைப் படித்துக்கொள்க.

புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.

(இ-ள்.) புண்படவே — (கேட்பவர்களுக்கு) மன வருத்தம் உண்டாகும்படியான, வார்த்தைதனை-(தூஷணை) வசனங்களை, சொல்லவேண்டாம—(நீ) சொல்லாதே.

54. 6 வது கதையைப் படித்துக்கொள்க.

புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்.) புறம்சொல்லி—(ஒருவன்) எதிரில் இல்லாத போது தூஷித்து, திரிவாரோடு—திரிகின்றவர்களுடன், இணங்க வேண்டாம—(நீ) சேராதே.

55. கதை:—ஒரு காட்டில் தந்திரத்தில் மிகுந்த நரி யொன்று வசித்துவந்தது. அது 'பலத்தில் மிகுந்த சிங்கங்களுக்கும் நான் பயப்படமாட்டேன். இந்தக்காட்டில் என்னை ஜயிப்பவர் ஒருவரும் இல்லை' என்று எப்போதும் வீண் பெருமை பேசிக்கொண்டிருக்கும். அந்த நரிக்கு ஒரு பூனை நட்பாயிருந்தது. ஒருநாள் அது

பூனையை நோக்கி 'நண்பனே! வேட்டை நாய் முதலான சத்துருக்கள் உன்னை வளைத்துக்கொண்டால், எப்படித் தப்பித்துக் கொள்வாய்?' என்று கேட்டது. பூனை 'நண்பனே! எனக்கு ஒன்றும் அதிகமாகத் தெரியாது; மரத்தில் ஏறித்தான் தப்பித்துக்கொள்ள வேண்டும்' என்று சொல்லிற்று. நரி சமீபத்தில் மரம் இல்லாவிட்டால் நாய்களிடத்தில் அகப்பட்டுக்கொள்ள வேண்டியது தானே; எனக்கு ஆயிரம் உபாயங்களுக்கும் அதிகமாகத் தெரியும்; ஒன்று இல்லாவிட்டால் மற்றொன்று செய்து தப்பித்துக் கொள்ளுவேன்' என்று சொல்லிறது. அப்போது 'ஹா! ஹா!' என்று வேட்டைக்காரர் சத்தமும் நாய்களின் குரைப்பும் சமீபத்தில் கேட்டன. அவர்கள் யாவரும் நரியைத் தேடிவந்தார்கள். பூனை நொடிக்குள் மரத்தில் ஏறிக்கொண்டு 'நண்பனே! உன் வீரியவார்த்தை எனக்கு ஆபத்தாக முடிந்தது. உன்னுடன் பழகாவிட்டால் எனக்கு இந்த ஆபத்து நேர்ந்திராது' என்று சொல்லிற்று. நரி விலவிலத்து ஒன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து நின்றது. அதற்குள் வேட்டை நாய்கள் நாற்புறத்திலும் வளைத்துக்கொண்டு அந்நரியை நிமிஷத்தில் கடித்துக் கொன்று விட்டன. ஆதலால், என்னை ஜயிப்பவர் இல்லையென்று வீரியம் பேசித் திரியலாகாது. அங்ஙனம் திரிகின்றவர்களோடு சேரவும் கூடாது.

மறம்பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்) மறம்பேசி—வீரியம்பேசி, திரிவாரோடு—திரிகின்றவர்களுடன், இணங்க வேண்டாம்—(நீ) சிநேகம் செய்யாதே.

56. *கதை:*—ஒருநாள் இரண்டு பூனைகள் ஒரு அப்பத்தைத் திருடி இரண்டும் சமமாகப் பங்கிட்டுக்கொண்டன. அதில் ஒரு பூனை 'என் பங்கைக் காட்டிலும் உன்பங்கு அதிகம்' என்று சொல்லிற்று. அந்தப் பூனை 'இல்லை, இல்லை; உன் பங்குதான் அதிகம்' என்றது. முதற் பூனை 'சற்றுப்பொறு! நம்முடைய வழக்கை வேறொருவரிடத்தில் தீர்த்துக் கொள்ளலாம்' என்று அதை அழைத்துக் கொண்டுபோய் ஒரு குரங்கைக் கண்டு அப்பத் துண்டுகளைக்காட்டி வழக்கைத் தெரிவித்தது. குரங்கு இரண்டு துண்டுகளையும் வாங்கி ஒன்றில் கொஞ்சம் கடித்துக்கொண்டு 'இப்போது சரியாக இருக்கிறதா? பார்த்துச் சொல்லுங்கள்' என்றது. பூனைகள் மற்றத்துண்டு பெரிதென்று சொல்லின. குரங்கு 'இப்போது பாருங்கள்' என்று சொல்லி அந்தத் துண்டில் கொஞ்சம் கடித்துக்கொண்டது. அப்போதுதான் பூனைகளுக்குக் கொஞ்சம் புத்திவந்தது. அவை 'ஐயா! நியாயாதிபதியே! தங்கள் மத்தியஸ்தம் போதுமானது; ஒரு துண்டு கொஞ்சம் பெரிதாக இருந்தாலும் இருக்கட்டும். அவைகளை எங்களிடத்தில் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்று கேட்டன. குரங்கு 'ஏன் அவசரப்படுகிறீர்கள்? நான் இந்நேரமாக உங்கள் வழக்கைத் தீட்டதற்குக் கூலி வேண்டாமா?' என்று சொல்லி இரண்டு துண்டுகளையும் வாயில் போட்டுக்கொண்டு போயிற்று. பூனைகள் அப்பத்தை இழந்து வந்தவழியே வீட்டுக்குத் திரும்பின. ஆகலால், வழக்குச் செய்து சண்டையிடலாகாது.

வாதாடி வழக்கழிவு செய்ய வேண்டாம்.

(இ-ள்.) வாது வழக்கு ஆடி—சண்டையிட்டும் வழக்குச்செய்தும், அழிவு செய்யவேண்டாம்—(நீ) பொருளை நாசம் செய்யாதே.

57. கதை:—ஒரு காட்டில் நீள்செவியன் என்று ஒரு முயல் இருந்தது. 'ஓட்டத்தில் என்னை வெல்லுகின்றவன் இல்லை; எப்படிப்பட்ட சிங்கம் புலி யானையாக இருந்தாலும், ஒரு நிமிஷத்தில் வென்றுவிடுவேன்' என்று காட்டில் உள்ள எல்லா மிருகங்களையும் சண்டைக்கு இழுத்து வந்தது. மிருகங்கள் யாவும் அதன் சாமர்த்தியத்துக்கு அஞ்சி வெல்லும் உபாயம் தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தன. அப்போது ஒரு ஆமை 'நீங்கள் விசாரப்படவேண்டாம். நான் முயலுக்குச் சரியாக வோடிப் பந்தயம் ஜெயிக்கிறேன். இதில் சந்தேகம் இல்லை' என்று சொல்லிற்று. எல்லா மிருகங்களும் ஒப்புக்கொண்டன. சிங்கம் அவ்விரண்டும் ஓரிடத்தை ஓடிச் சேரவேண்டும் என்று ஏற்பாடுசெய்து அவ்விடத்தில் சில மிருகங்களைக் காவல்வைத்தது. பிற்பாடு முயலும் ஆமையும் பந்தயம் ஓடப் புறப்பட்டன. முயல் தீவிரமாக வோடிச் சில நிமிஷங்களுக்குள் பாதிதூரத்தைக் கடந்து திரும்பிப்பார்த்தது. அதுவரையில் ஆமை இருக்கும் இடம் தெரியவில்லை. அதனால் முயல் கருவங்கொண்டு 'நாம் ஏன் இப்படி வெயிலில் தலைதெரிக்க ஓடவேண்டும். ஆமை இங்கு வந்து சேருவதற்கு அஸ்தமனமாகும். அது வரும்வரையில் சற்றுநேரம் இந்த மரநிழலில் படுத்திருந்துவிட்டு மெதுவாகச் செல்லலாம்' என்று

சொல்லிக்கொண்டு அவ்விடத்தில் படுத்துத் தூங்கிற்று. ஆமை மெள்ளமெள்ள விடாமல் நகர்ந்து முயல் எழுந்திருப்பதற்குள் குறிப்பிட்ட இடத்தை அடைந்து பந்தயத்தைக் கெலித்தது. முயல் விழித்துக் கொண்ட பிற்பாடு வேகமாகத்தான் ஓடிற்று. ஆனாலும் ஜயமடையவில்லை. பின்பு உடன்படிக்கைப்படி மற்ற மிருகங்கள் அந்த முயலைக் கொன்று தின்றுவிட்டன. ஆதலால், 'எனக்கு மிஞ்சினவன் இல்லை' என்று எவரும் வல்லமை பேசக்கூடாது.

திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.

(இ-ள்) திறம்பேசி—வல்லமைபேசி, கலகம் இட்டு—சண்டையிட்டு, திரியவேண்டாம்—(நீ) திரியாதே.

58. கதை:—வெகுகாலத்துக்கு முன்பு இரணியன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் புத்திரனுக்குப் பிரக்லாதன் என்று பேர். பிரக்லாதன் தெய்வபக்தியுள்ளவன். அவன் எப்போது பார்த்தாலும் 'நாராயணா! கோவிந்தா!' என்று கடவுளைத் துதித்துக்கொண்டேயிருப்பான். இரணியன் 'கடவுள் நாமத்தை உச்சரிக்கவேண்டாம்' என்றும் 'அந்தக் கடவுள் நம் குலத்துக்குப் பகைவன்' என்றும் பலவிதமாகச் சொல்லிப் புத்திரனைத் தடுத்தான். ஆனால், பிரக்லாதன் அவ்வசனங்களைக் கேட்கவில்லை. எப்போதும் கடவுளை விடாமல் தொழுதுகொண்டேயிருந்தான். அதற்கு இரணியன் கோபம்கொண்டு தன்புத்திரனை நெருப்புக்குழியில் தள்ளினான். மலையிலிருந்து கீழே உருட்டினான். பாம்புகளைக் கடிக்கவிட்டான். இன்னும் பலவிதமான சித்திரவதைகளையெல்லாம்

செய்தான். ஒன்றினாலாவது பிரக்லாதனுக்கு உபத்திரவம் உண்டாகவில்லை. அவன் கடவுள் அருளால் எல்லாவற்றையும் எளிதில் நீக்கிக் கொண்டு விட்டான். ஆதலால், நாமும் பிரக்லாதனைப் போலத் தெய்வத்தை மறவாமல் துதித்து வர வேண்டும்.

தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

(இ-ள்) தெய்வத்தை—கடவுளை, ஒருநாளும்— ஒரு தினமும், மறக்க வேண்டாம—(நீ) மறவாதே.

59. கதை:—முன்னொரு காலத்தில் அயோத்திப்பட்டணத்தில் அரிச்சந்திரன் என்று ஓரரசன் இருந்தான். அவன் பொய்சொல்லுவதற்கு அஞ்சித் தன்னுடைய அரசாட்சி முதலான எல்லாப் பொருள்களையும் கவுசிகமுனிவருக்குத் தானம் பண்ணிவிட்டுக் காசிப்பட்டணம் போனான். அவன் அப்புறம் கூட அம்முனிவருக்குக் கொஞ்சம் பொன் கடன் கொடுக்க வேண்டியதாயிற்று. அந்த அரசன் தன் மனைவியையும் மகனையும் காசிப் பட்டணத்திலிருந்த ஓர் அந்தணனுக்கு அடிமைப்படுத்தித் தானும் பறையனுக்கு அடிமையாகிக் கடனைக்கொடுத்துச் சுடுகாடு காத்துவந்தான். அப்போது கவுசிகமுனிவர் வந்து 'அரசனே! ஒரு பொய் சொல்லிவிடு! உன்னைத்திரும்பவும் உலகத்துக்குச் சக்ரவர்த்தி யாக்குகிறேன்' என்றுசொன்னார். அரிச்சந்திரன் அந்த ஆபத்துச் சமயத்திலுங்கூடப் பொய்சொல்ல விரும்பவில்லை. உண்மை பேசுவதையே உறுதியாகக் கொண்டு உயர்ந்த கீர்த்தியையும் இழந்த நாட்டையும்

அடைந்தான். ஆதலால், நாமும் அரிச்சந்திரனைப்போல உண்மை பேசவேண்டும்.

இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.'

(இ-ள்) இறந்தாலும் — மரணம்வருவதாக இருந்தாலும், பொய்தன்னை—பொய்யை, சொல்லவேண்டாம்—(நீ) சொல்லாதே.

60. கதை:—46-வது கதையில் துரியோதனன் தன் சிறிய தந்தையான விதுரனை இராஜசபையில் தூஷித்து அவமானப்படுத்தினன் என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா? விதுரன் அந்த அவமான வார்த்தைகளைக் கேட்டுக் கோபங்கொண்டு தன்னுடைய உயர்ந்த வில்லை ஒடித்துப்போட்டு 'இனி உன்முகத்தில் விழிப்பதில்லை என்று தேசாந்தரம் போய்விட்டான். ஆதலால், விதுரனைப்போலவே நாமும் அவமானப் படுத்துகின்ற பந்துக்களை விரும்பி மறுபடியும் அவர்கள் சாப்பாட்டை உண்ணலாகாது.

ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்.

(இ-ள்) ஏசல்இட்ட—(நமமைத்) தூஷித்துப் பசினை, உற்றாரை—பந்துக்களை, நத்தவேண்டாம்—(நீ) நம்பிச் சேராதே.

61. கதை:—முற்காலத்தில் காந்தார்தேசத்தில் சகுனி என்று ஓர் அரசன் இருந்தான். அவன் துரியோதனனுக்கு மாமன் ஆகவேண்டும். துரியோதனன் தகப்பனார் பிறவிக் குருடர். அவன் துரியோதனன் முதலானவர்களுக்கு நன்மை செய்வதாக முதலில் அஸ்தினபுரம் வந்து சேர்ந்தான். துரியோதனனுக்குச் சிறிய தந்தை

யின் குமாரர் ஐந்துபேர் இருந்தார்கள். அவர்களுக்குப் பாண்டவர் என்று பேர். சகுனி அஸ்திஞபுரத்துக்கு வந்தபோது துரியோதனனும் அவன் தம்பிமார்களும் பாண்டவர்களிடத்தில் அதிகப் பக்ஷம் பாராட்டி வந்தார்கள். சகுனி துரியோதனனுக்கும் அவன் சகோதரர்களுக்கும் 'அஸ்திஞபுரத்தின் அரசாட்சியைச் சொந்தமாக்குகிறேன்' என்று சொல்லிப் பாண்டவர்களுக்கும் அவர்களுக்கும் பகையை உண்டு பண்ணிப் பல விதங்களாலும் அதனை வளர்த்துக் கொண்டே வந்தான். அவன் கலகத்தினலேயே பிற்பாடு இருவருக்கும் சண்டை உண்டாயிற்று. அந்தச் சண்டையில் துரியோதனனும் அவன் தம்பிமார்களும் அநியாயமாக இறந்துபோய் விட்டார்கள். சகுனி அவர்கள் வீட்டிக்குவந்து தங்கிக் கலகம் பண்ணுமல் இருந்தால் அவர்கள் அப்படி இறந்திருக்க மாட்டார்கள். ஆதலால், சகுனியைப் போல ஒரு குடும்பத்தைக் கலகம்செய்து கெடுக்கலாகாது.

கூறுக்கி ஒருகுடியைக் கெடுக்க வேண்டாம்.

(இ—ள்) கூறுஆக்கி—பிளவுபடுத்தி, ஒருகுடியை—ஒருகுடும்பத்தை, கெடுக்கவேண்டாம்—(நீ) கெடுக்காதே.

---

62. * * * *

63. 46-வது கதையில் கிருஷ்ணன் பாண்டவர்களுக்காக அஸ்திஞபுரத்துக்குத் தூதுபோனன் என்று சொல்லி யிருக்கிறதல்லவா? அப்போது துரியோதனன் அசுவத்தாமா என்ற ஒரு வெற்றி வீரனை நீ 'பாண்டவர்களுக்குஉதவிசெய்வதாக

அந்தரங்கத்தில் சத்தியம்பண்ணிக் கொடுத்திருக்கி ருய்' என்று அனைவருக்கும் முன்னிலையில் அவன் மீது குற்றம் சுமத்தினன். அசுவத்தாமா அப்படிப் பட்ட உடன்படிக்கை யொன்றையுந் தான் செய்து தரவில்லை யென்று பலவாறு சத்தியம் பண்ணிக் காட்டினன். ஆனலும், துரியோதனன் அவன் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளவில்லை. அந்த வீரனை ஒருவராலும் ஜயிக்கமுடியாது. அவனுக் குச் சேனபதி உத்தியோகம் கொடுத்திருந்தால் துரியோதனனுக்கு அந்தச் சண்டையில் நிச்சய மாக வெற்றி கிடைத்திருக்கும். அவன் அசுவத் தாமாவை அயோக்கியன் என்றும் இராஜத் துரோகி யென்றும் உண்டவீட்டுக்கு இரண்டகம் பண்ணுகின்றவன் என்றும் அவதூறு பேசினன். அதன் பலனக அவனுக்குச் சண்டையில் ஜயம் கிடைக்கவில்லை. ஆதலால், வெற்றி பொருந்திய வீரர்களின்மேல் அவதூறு பேசக்கூடாது.

தூறுகித் தலையிட்டுத் திரிய வேண்டாம்.

(இ-ள்) தூறு ஆக்கி — அவதூறு வார்த்தைகளை உண்டுபண்ணி, தலையிட்டு—(அதில்) முயற்சிசெய்து, திரிய வேண்டாம்—(நீ) திரியாதே.

---

## 64. 10-வது கதையைப் படித்துக்கொள்க.

துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

(இ-ள்.) துர்ச்சனராய்—(கொலை களவு முதலியவற் றைச் செய்கின்ற) துஷ்டர்களாகி, திரிவாரோடு—திரி கின்றவர்களுடன், இணங்க வேண்டாம்—(நீ) சேராதே.

---

65. 58 வது கதையில் இரணியன் தன் புத் திரன் பிரகலாதனை 'நீ ஹரியின் நாமத்தை உச்ச

ரிக்கக் கூடாதென்று கட்டளையிட்டான் என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா? அந்த இரணியன் தன் ஆளுகையில் எவரும் ஹரியின் நாமத்தை உச்சரிக்கக்கூடாது என்றும், அப்படி உச்சரிக்கின்றவர்கள் சித்திரவதைக்குச் சொந்தமாவார்கள் என்றும் உத்தரவு செய்திருந்தான். நாட்டில் உள்ளவர்கள் அவன் உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்கள். அப்போது ஸ்ரீ ஹரி நரசிங்காவதாரம் பண்ணி இரணியனைக் கொன்றுவிட்டார். ஆதலால், நாமும் தெய்வத்தை இகழ்ந்து பேசக்கூடாது.

வீறுள தெய்வத்தை இகழ வேண்டாம்.

(இ-ள்.) *வீறுள — பெருமை பொருந்திய, தெய்வத்தை—கடவுளை, இகழவேண்டாம்— (நீ) இகழ்ச்சி பண்ணாதே.*

---

## 66. 63 வது கதையைப் படித்துக்கொள்க.

வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்.

(இ-ள்.) *வெற்றிஉள்ள—வெற்றிபொருந்திய, பெரியோரை—பெரிய வீரர்களை, வெறுக்கவேண்டாம்—(நீ) வெறுத்துப் பேசாதே.*

## உலகநீதி உரையும் கதைக்குறிப்பும்

முற்றுப் பெற்றன.

---

P. R. Rama Iyar & Co., Printers, Madras